DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1512 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 28, 2025

# ஏப்ரல் 28 கனடிய பொதுத் தேர்தல் களத்தில் நிற்கும் நான்கு தமிழ் பேசும் வேட்பாளர்கள்

## இருவர் லிபரல்! இருவர் கொன்சவேர்ட்டிவ்!



(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

எதிர்வரும் ஏப்ரல் 28ம் திகதி நடைபெறவுள்ள கனடிய பொதுத் தேர்தல் களத்தில் நிற்கும் மொத்த வேட்பாளர்களில் நான்கு தமிழ் பேசும் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கு பதிவு செய்கின்றோம். அவர்களில் இருவர் லிபரல் கட்சி சார்பிலும் ஏனைய இருவர் கொன்சவேர்ட்டிவ் கட்சி சார்பிலும் போட்டியிடுகின்றனர் எனவும் உறுதி செய்யப்பெற்றுள்ளது.

கடந்த லிபரல் அரசாங்கத்தில் அமைச்சராகப் பணியாற்றிய ஹரி ஆனந்தசங்கரி, ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியிலும் புதிய முகமாக மத்திய பாராளுமன்றத் தேர்தலில் குதிக்கும் தற்போதைய மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார உறுப்பினர் ஜுவொனிற்றா நாதன் **Pickering-Brooklyn** தேர்தல் தொகுதியிலும், கொன்சர்வேர்ட்டிவ் கட்சி சார்பில் போட்டியிடும் லையனல் லோகநாதன் **Markham - Thornhill** தொகுதியிலும் மற்றும் அதே கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் காவல்துறை அதிகாரியான நிரான் ஜெயநேசன் Markham - Stouffville தொகுதியிலும் போட்டியிடுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நால்வருக்குமே வெற்றி வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளதாக பேசப்பட்டாலும் அந்தந்த வேட்பாளர்களும் கடுமையாக “உழைக்க” வேண்டும் என்று தமிழ் மக்கள் சிலர் எமது ஆசிரிய பீடத்தோடு பகிர்ந்து கொண்டதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

எவ்வாறாயினும் நான்காவது தடவையாக தற்போது தேர்தலுக்கு முகம் கொடுக்கும் முன்னாள் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தொடர்ச்சியாக வெற்றி பெற்றவர் எனற வகையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி மீண்டும் ஆட்சியில் அமர்ந்தால். ஹரி அவர்களுக்கே நீதி அமைச்சர் பதவியும் சட்டமா அதிபர் பதவியும் வழங்கப்பெறும் என்பது கட்சியின் தலைமைப் பீடத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளதும் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

# ‘சட்டமூலம் 104: தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை மீதான வழக்கை கனடா உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது’ என்னும் உற்சாகமளிக்கும் செய்தி



மேற்படி சட்டமூலம் 104ஐ எதிர்த்து தமிழின அழிப்பு மறுப்பாளர்களால் கனடா மேன்முறையீடு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கனடா உச்சநீதிமன்றம் 27-03-2025 அன்று வியாழக்கிழமை தள்ளுபடி செய்துள்ளது. இது கனடா வாழ் தமிழர்களுக்கு மட்டுமல்லஇ இன அழிப்பினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீள முனையும் உலகெங்கிலுமுள்ள தமிழர்களுக்கும் அவர்களின் தலைமுறையினருக்குமான கல்வி அறிவூட்டலுக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அவர்கள். (தொடர்ச்சி 3ம் பக்கம்)

SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
Enjoy The Freedom Of Better Credit

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025

# உதயன் சர்வதேச விருது விழா 2025

UTHAYAN
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards-2025

**Date:** Saturday, June 14th, 2025
**Time:** 6:00 PM
**Venue:** The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4

## This Year's Awards Are:
## இவ்வருடத்திற்குரிய விருதுகள்

Uthayan Literary and Artistic Exuberance Award
Uthayan Inter-Communal Relationship Award
Uthayan Business Entrepreneur Award - Ontario
Uthayan Business Entrepreneur Award - Quebec
Uthayan Leadership Award
Uthayan Youth Icon Award
Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu

For More Information: 416-732-1608 / 647-762-9512

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# யாழ் குடா நாட்டில் கவனயீனமான சாரதிகளால் பறிக்கப்படும் அப்பாவிகளின் உயிர்கள்

இலங்கை அரசின் கீழ் இயங்கிவந்த காவல்துறையானது யாழ்ப்பாண மண்ணில் செயற்படாமல் இருந்த காலப்பகுதியில் அன்றைய வாகனச் சாரதிகள் தண்டனைகளுக்குப் பயந்த வண்ணமே வாகனங்களை வீதிகளில் செலுத்திச் சென்றார்கள். விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் தமிழீழ காவல்துறையானது இயங்கியபோது கிளிநொச்சி பரந்தன் இயக்கச்சி போன்ற பகுதிகளில் காணப்பட்ட சாரதிகளுக்கான எச்சரிக்கை அறிவித்தல்களை அவர்கள் கவனமாகப் படித்து அதன் பிரகாரம் வாகனங்களைச் செலுத்தினார்கள்.

குறிப்பாக. பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியோர்கள் பெண்கள் போன்றவர்கள், சாரதிகளின் முறையற்ற வாகனம் செலுத்துதலினால் பாதிக்கப்படக் கூடாது என்பதை சாரதிகளே கவனித்து செயற்பட்டார்கள்.

ஆனால் இன்றைய நாட்கள் விடிகின்றன பின்னர் இருள் வந்து சூழ்ந்து கொள்கின்றது அந்த நாள் கழிகின்றது. ஆனால் அன்றைய நாளில் எத்தனை உயிர்கள்

தமிழர் பிரதேசங்களில் வாகன விபத்துக்களில் பறிபோகின்றன என்ற விபரங்கள் வைத்தியசாலைகளிலும் பொலிஸ் நிலையங்களிலும் கணக்கிடப்படுகின்றன. இவற்றை மின்னூடங்கள் உடனடியாக உலகெங்கும் பரப்பிவிடுகின்றன. ஆனால் விபத்துக்கள் சம்பவித்த காரணத்தால் தங்கள் உறவுகளை இழந்த வீடுகள் என்னென்ன காட்சிகள் இடம்பெறுகின்றன என்பதை அறிய செய்திகளைப் படிக்கும் எத்தனை பேர் அக்கறை கொள்கின்றார்கள் என்பதுதான் கேள்வி.

அந்தந்த வீடுகளில் "ஒப்பாரி" கேட்கின்றது. தமது தந்தையையோ அன்றி தாயையோ அன்றி மாமாவையோ இழந்து தவிக்கும் குழந்தைகள் மற்றும் பெண்கள் தங்கள் எதிர்காலம் எப்படியிருக்கப் போகின்றதோ என்று அங்கலாய்க்க ஆரம்பிக்கின்றார்கள்.

ஆனால் அந்த நேரத்தில். விபத்துக்களுக்கு காரணமான சாரதிகளை "தப்ப வைப்பதற்கு" பொலிஸ் நிலையங்களிலும் வைத்தியசாலைகளிலும் அரசாங்க அலுவலகங்களிலும் "பேரங்கள்" பேசப்படுகின்றன. எங்கள் மண்ணிலிருந்து செய்தியையும் ஒளிப்படங்களையும் பார்க்கும் போது நூற்றுக்கு எண்பது வீதமான சாரதிகள் மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்துவதாலேயே விபத்துக்கள் ஏற்பட்டு அப்பாவிகள் தங்கள் உயிர்களை இழந்து தங்கள் உறவுகளையும் தவிக்க விட்டுச் செலகின்றார்கள் என்ற தகவல்கள் வெளிவருகின்றன.

எமது மண்ணில் எத்தனையோ அரச அலுவலகங்கள் மக்களுக்காக இயங்குகின்றன. அங்கு கற்றவர்களும் பட்டதாரிகளும் அரசாங்கம் வழங்கும் ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு பணிசெய்கின்றார்கள். அவர்களில் சிலராவது இந்த வாகன விபத்துக்கள் இடம்பெறாது தவிர்ப்பதற்குரிய வழிகளை ஆராய வேண்டாமா? வட மாகணத்திற்குரிய ஆளுனரும் அங்கு உள்ள ஐந்து அரசாங்க அதிபர்களும் இந்த "உயிர்காக்கும் பணியின்" பக்கம் தங்கள் பர்ரவைகளைச் செலுத்த மாட்டார்களா என்ற கேள்வியோடு இவ்வாரக் கதிரோட்டத்தை நிறைவு செய்கின்றோம்!

Trinity Thaiyal
Tailoring and Alteration Services

Mary James: (647) 467-1410
Located: Neilson and Sheppard
நாம் வழங்கும் தையல் சேவைகள்:
சாறி பிளவுஸ், சல்வார், லெங்கா, பாவாடை,
ஆண்களுக்குரிய ஆடைகள் தைத்தல் மற்றும் பல தையல்கள் வேலைகள், அத்துடன் உங்கள் சேலைகள் அழகாக உடுக்கக் கூடிய வகையில் Pleating செய்தல்
Instagram: @trinitythaiyal

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728

Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?

Not to Worry!
Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

## "சட்டமூலம் 104: தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை மீதான வழக்கை கனடா உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது" என்னும் உற்சாகமளிக்கும் செய்தி

(முன் பக்கத் தொடர்ச்சி)

இந்த உற்சாகமளிக்கும் செய்தி தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

"இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு, ஒவ்வொரு ஆண்டும் மே 12 முதல் 18 வரை ஒன்ராறியோவில் தமிழின அழிப்புத் தொடர்பான அறிவு புகட்டல் வாரமாக அங்கீகரிக்கப்பட்டு, பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள், கல்வியாளர்கள், தமிழ் சமூகம் மற்றும் அனைத்து ஒன்ராறியோ மக்களும் தமிழின அழிப்புப் பற்றி அறிந்து கொள்ள இச்சட்டம் வழியமைக்கிறது.

இத்தருணத்தில், ஒன்ராறியோ முதல்வர் டக் ஃபோர்ட் அவர்களுக்கும், எனது சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமூலம் 104 ஐப் பாதுகாப்பதில் அயராது அர்பணிப்புடன் பணியாற்றிய அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளுக்கும், சமூக உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தமிழ் இளையோருக்கும் நான் மிகவும் நன்றியுடையவனாயுள்ளேன். கனடா உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தீர்ப்பு, இழந்த அப்பாவி உயிர்களுக்கான நீதியையும், நடைபெற்ற தமிழின அழிப்புக்கான நீதிகோரலுக்கான செயற்பாட்டுக்கும் வலுச் சேர்க்கிறது." என்றும் தெரிவித்துள்ளார்.

விஜய் தணிகாசலம்,
ஒன்ராறியோ மாநில சட்டமன்ற உறுப்பினர்: ஸ்காபரோ - ரூஜ் பார்க்

மன்னாரில் காணி விற்பனைக்கு உண்டு
--------------------------------------------------
மன்னார் சின்னக் கடையில் 20 பேர்ச் வீட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.
அதில் 5 கடைகள் கட்டுவதற்கான அனுமதி பெறப்பட்டு.
அதற்கான வரைபடமும் உள்ளது. காணியைச் சுற்றி நான்கு பக்கமும் மதில் கட்டப்பட்டு கேற்றும் போடப்பட்டுள்ளது. காணிக்கு அருகாமையில் பிரதான வீதியும் ஆஸ்பத்திரியும் பெண்கள் கொன்வென்ட் பாடசாலையும் ஆண்கள் பாடசாலையும் கோயிலும் உள்ளன.
--------------------------------------------------
தொடர்புகளுக்கு ஜேறாட் என்பவரை
(416) 822-7358 என்ற இலக்கத்தில் அழைக்கவும்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# துவிச்சக்கர வண்டி மோதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் மரணம்!

துவிச்சக்கர வண்டி மோதிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர் 23-03-2025 அன்றையதினம் உயிரிழந்துள்ளார். இதன்போது மன்னார் - பேசாலை பகுதியைச் சேர்ந்த அன்ரனி பெனாட் லோகு (வயது - 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் கடந்த 22 ஆம் திகதி வயலில் மாட்டினை மேயக் கட்டிவிட்டு வீதிக்கு ஏறினார். இதன்போது வீதியால் வந்த சைக்கிள் அவர் மீது மோதியது.

இந்த விபத்தில் காயமடைந்த அவர் பேசாலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, 23ஆம் திகதி அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் 23-03-2025 அன்று மதியம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்றவர், முச்சக்கர வண்டி மோதியதில் மரணம்!

யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்ற குடும்பஸ்தர் மீது முச்சக்கர வண்டி மோதியதில் அவர் 24-03-2025 அன்றையதினம் உயிரிழந்துள்ளார். நாவற்குழி - புதிய குடியிருப்பு திட்டம் பகுதியைச் சேர்ந்த அந்தோனி ரிக்மன் டெனிஸ் (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இவர் 23-03-2025 அன்றையதினம் தனது பத்து மாத குழந்தையையும் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக்கொண்டு நாவற்குழி வீதியால் பயணித்தார். இதன்போது அவ்வீதியால் வந்த முச்சக்கர வண்டி மோதியதில் அவர் படுகாயமடைந்தார்.

இந்நிலையில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 24-03-2025 மாலை அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். முச்சக்கர வண்டியை செலுத்தியவர் மதுபோதையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்ப்பாணத்தில் மின்கலங்களை திருடிய முன்னாள் கடற்படை சிப்பாய் உள்ளிட்ட ஐவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களின் மின் கலங்களை தொடர்ச்சியாக திருடி வந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கடற்படையின் முன்னாள் சிப்பாய் உள்ளிட்ட ஐந்து பேரையும் எதிர்வரும் 04ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கைத்தொலைபேசி தொலைத்தொடர்பு வலையமைப்புக்களின் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு பொருத்தப்பட்டிருந்த மின் கலங்கள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வந்துள்ளன.

இது தொடர்பில், கோபுரங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்குரிய பொலிஸ் நிலையங்களில், குறித்த நிறுவனங்கள் முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தன.

முறைப்பாடுகளின் பிரகாரம் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நளின் தர்ஷனா தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், மின்கலன்களை களவெடுத்தவர்கள் அம்பாறை பகுதியில் பதுங்கியிருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற விசேட பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை அம்பாறையில் இருந்து கோப்பாய் பொலிஸ் நிலையம் கொண்டு வந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த வேளை கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கடற்படை முன்னாள் சிப்பாய் எனவும், மற்றுமொருவர் களவாடப்பட்ட மின் கலங்களை கொள்வனவு செய்தவர் எனவும் ஏனைய மூவரும் களவுக்கு உடந்தையாக செயற்பட்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 192 மின் கலங்களை களவாடியுள்ளனர் எனவும், மின்கலம் ஒன்றின் பெறுமதி சுமார் ஒரு இலட்ச ரூபாய்க்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில், ஐவரையும் எதிர்வரும் 04-04-2025 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

அதேவேளை களவாடப்பட்ட மின் கலங்களை பொலிஸார் மீட்டுள்ளதுடன், அவற்றை நீதிமன்றில் சான்று பொருட்களாக பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# வவுனியா தேக்கந்தோட்டம் பகுத – 'யில் இராணுவம் பொலிசார் திடீர் சுற்றிவளைப்பு!



வவுனியா கற்குழி மற்றும் அதனை அண்டிய பகுதிகளான தேக்கந்தோட்டம் பகுதிகளில் 24-03-2025 அன்று மாலை பொலிசார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்டருந்தனர்.

குறிப்பாக குற்றச்செயல்களில் ஈடுபட்டு தலைமறைவாகியுள்ள நபர்கள் மற்றும் போதைப்பொருள் வியாபரத்தில் ஈடுபடும் நபர்களை கைதுசெய்யும் நோக்குடன் குறித்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா தலைமை பொலிஸ்நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரியின் தலைமையில் இராணுவத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட இவ் நடவடிக்கையில் சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் சோதனையிடப்பட்டதுடன்,குடியிருப்பு பகுதிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

## வன்னிச் சங்கம் - கனடா.

## VUnited Care for Kids Inc.

Organization – Reg # 1913383. Charitable Organization.
Head office address: 8-3500 McNicoll Ave, Toronto (ONT), M1V4C7.
Secretary@vcarekids.org info@vcarekids.com 416-644-1113.

21-03-2025

அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களுக்கும்,
VUnited Care For Kids Inc Ontario (வன்னிச் சங்கம்.)

அன்புடையீர்!

பொதுச்சபைக் கூட்டம், General Meeting- 2025

VUnited Care For Kids Inc Ontario அமைப்பினது வருடாந்த பொதுக் கூட்டமானது எதிர்வரும் சித்திரை (April) மாதம் 27ந் திகதி (ஞாயிற்றுக்கிழமை) 2025ம் ஆண்டு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது சமூகம் தரும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: 8-3500 McNicoll Ave., Scarborough, ON
காலம்: April 27, 2025 பிற்பகல் 2.00 மணி (ஞாயிற்றுக்கிழமை)

விசேட குறிப்பு: நீங்கள் எதிர்வரும் 7-4-2025ம் திகதிக்கு முன்பாக சந்தாப்பணத்தினைச் செலுத்தியிருந்தால் மாத்திரம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

### நிகழ்ச்சிநிரல்

1) ஒரு நிமிட மௌனப்பிராத்தனை. 1 minute silence prayer.
2) தலைமையுரை. President's addressing.
3) செயலாளர் கடந்த பொதுச்சபைக்கூட்ட, செயற்திட்ட அறிக்கை சமர்ப்பித்தல்: Recapitulation of last General meeting by Secretary.
4) வருடாந்தக் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்: நிதியாளர் Last year Treasurer's Accounts Report.
5) ஏழு இயக்குனர்சபை உறுப்பினர் தேர்வுக்கான தேர்தல். Election for Seven Board Members.
6) தமிழர் சனசமூக நிலையம் அமைப்பதற்கான நிதி உதவி வழங்கும் திர்மானம். Resolution to provide financial assistance for the establishment of a Tamil Community Center.
7) அமைப்பினது நன்மதிப்புக்குப் பங்கம் ஏற்படுத்தும்வகையில் பொதுச்சபை உறுப்பினர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் தவறான செய்திகளைப் பரப்புபவர்கள்மீதான தீர்மானம் எடுத்தல்.
Taking decisions on those who spread false information among the members of the general assembly and the public in a manner that damages the reputation of the organization.
8) புதிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுதல். New applications approval.
9) கணக்காய்வாளர்கள் இருவரை நியமித்தல். Internal Auditors' appointment.
10) பிற விடயங்கள் Time for other matters.

Mr. R. Sivakumaran
President
VUnited Care For Kids Inc On.

S. Ratnakaran
Secretary
VUnited Care For Kids Inc On.

குறிப்பு: கூட்டத்தில் கேட்கப்படவிருக்கும் வினாக்களை எழுத் துமூலம் பங்குனி 31ம் திகதிக்கு முன்னாராக அறியத்தரவும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# வனவிலங்கு மின்சார வேலி தொழிலாளர் சங்கத்தினர் "ஜனாதிபதியின் கவனத்திற்கு" வேலையை நிரந்தரமாக்குமாறு கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஆர்பாட்டம்

இலங்கை வனவிலங்கு மின்சார வேலி தொழிலாளர் சங்கத்தினர் "ஜனாதிபதியின் கவனத்திற்கு அமைதி ஊர்வலம்" எனும் தலைப்பில் வேலையை நிரந்தரமாக்குமாறு கோரி 24-03-2025 அன்று திங்கட்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கவனயீர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை கனிஸ்ட சேவையாளர்களின் தொழிலாளர் சங்கம் மற்றும் இலங்கை வனவிலங்கு மின்சார வேலி தொழிலாளர் சங்கத்தின் மட்டு மாவட்ட தலைவர் இர்பான் ஏற்பாட்டினையடுத்து பிரதான பஸ்நிலையத்தில் இருந்து கச்சேரிவரை பேரணியாக செல்வதற்கு திட்டமிட்ட நிலையில் தேர்தல் விதிமுறையில் செல்வதற்கு பொலிசார் அனுமதி மறுத்ததையடுத்து காந்தி பூங்காவில் வனஜீவராசிகள் திணைக்கள தொழிலாளர்கள் ஒன்று திரண்டனர்.

இதனையடுத்து நாட்டில் நிலவும் யானைப் பிரச்சனைகள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளைப் பராமரிப்பதற்கென நாடு முழுவதும் 4731 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு தற்போது வரை 3530 உத்தியோகத்தர்கள் மாத்திரமே கடமைபுரிகின்றனர் அவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டு சுமார் 5 வருடங்கள் ஆகியும் அடிப்படை வசதியின்றி நிரந்தரம் நியமனம் இன்றி இரவு பகலாக இற்றைவரை மாதாந்தம் 22500 ரூபாய் பயிற்சி கொடுப்பனவை மாத்திரம் பெற்று கொண்டு கடமையாற்றி வருவதாகவும்.








மனித யானை மோதல்களைக் குறைக்க நாங்களும் பங்களிப்பவர்கள், எங்கள் பிரச்சனை அதிமேதகு ஜனாதிபதிக்கு, எங்கள் பிரச்சனையை ஜனாதிபதி அவர்களால் மாத்திரமே தீர்க்க முடியும், நிரந்தர நியமனம் இன்றி கடந்த 4 வருடங்களாக மாதம் 22500 ரூபாவுக்கு நாங்கள் வேலை, போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் இந்த ஆர்பாட்டத்தை கண்காணித்து கொண்டதுடன் சுமார் 2 மணித்தியாலம் ஆர்பாட்டகாரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்று பழைய கச்சேரியில் அரசாங்க அதிபரை சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்தனர்.

# முன்னாள் இராஜாங்க அமைச்சர் கைது செய்யப்பட்டதை வெடி கொழுத்தி கொண்டாடிய இளைஞர்கள் – மட்டக்களப்பு நகரில் அரங்கேறிய ஆரவாரம்



முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணக்குழு கைது செய்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்ததையடுத்து ஒன்றினைந்த சில இளைஞர்கள் மட்டக்களப்பு நகர் மணிக்கூட்டு கோபுரத்து வீதி சுற்றுவட்டத்தில் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 9.00 மணியளவில் வெடி கொழுத்தி கொண்டாடினர்.

முன்னாள் அமைச்சர் கைது விவகாரத்தையடுத்து மாவட்டத்தில் மக்கள் மத்தியில் பேசும் பொருளாக மாறிய நிலையில் சம்பவதினமான செவ்வாய் இரவு சுமார் 09.00 மணியளவில் மட்டக்களப்பு நகர் மணிக்கூட்டு கோபுரத்து வீதி சுற்றுவட்டத்தில் ஒன்றினைந்து வெடிகளை கொளுத்தி சந்தோசத்தை வெளிப்படுத்தியதையடுத்து அந்த பகுதி வெடி சத்தத்தினால் அதிர்ந்ததையடுத்து மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

புு. கஜிந்தன்

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா கடமையாற்றிய நெடுந்தீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா கடமையாற்றிய நெடுந்தீவு பிரதேச செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் 21.03.2025 வெள்ளிக்கிழமை அன்றையதினம் அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்களால் கௌரவிக்கப்பட்டார்கள்.

இதன் போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் அவர்கள், கடல்வழி போக்குவரத்து ஊடாக மேற்கொள்ளப்பட்ட திருவிழா ஒழுங்கமைப்பிற்கும் அங்கு நான்கு நாட்கள்



தங்கியிருந்து அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய நெடுந்தீவு பிரேதச செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களை ஊக்கப்படுத்துகின்ற செயற்பாடாக இது அமையும் எனவும், அந்தவகையில் நெந்தீவு பிரதேச செயலாளர், கணக்காளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கு தமது நன்றியினைத் தெரிவித்தார். இச் சந்தர்ப்பத்தில் கடற்படையிரின் ஒத்துழைப்பு சிறப்பாக அமைந்திருந்தனையும் குறிப்பிட்டதுடன், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், நெடுந்தீவு பிரதேச சபையினர், வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், போக்குவரத்து மற்றும் சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பிற்கும் தமது நன்றியினைத் தெரிவித்தார்.

மேலும், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், உதவி மாவட்டச் செயலாளர், அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களின் பங்களிப்பிற்கும் தமது நன்றியினை அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க அதிபர் அலுவர்களினால் மெச்சுரை வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்டச் செயலாளர், அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர், நெடுந்தீவு பிரதேச செயலாளர், கணக்காளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# மல்லாகம் நீதிமன்றத்திற்குள் யுவதியுடன் சேஷ்டை புரிந்தவர் கைது!

மல்லாகம் நீதிமன்றத்திற்குள் யுவதியுடன் சேஷ்டை புரிந்த நபர் ஒருவர் 21ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றையதினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், மல்லாகம் நீதிமன்றத்தில் கடமை புரியும் 48 வயதுடைய, திருமணமாகாத குறித்த நபர், நீதிமன்றத்தில் வேலை செய்யும் 28 யுவதியுடன் தொடர்ச்சியாக சேட்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதனை பொறுத்துக் கொள்ள முடியாத குறித்த யுவதி இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்றையதினம் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபரை இன்றையதினம் விசாரணைகளுக்கு அழைத்த சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் கைது செய்தனர்.

குற்றம் நிகழ்ந்த இடம் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குள் உள்ளடங்குவதால் சந்தேகநபர் தெல்லிப்பழை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியாவில் உள்ள ஈழ அகதிகள் இலங்கைக்கு திரும்பவேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு என்கிறார் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன்!




இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் இலங்கைக்கு திரும்பவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு நாடு திரும்புவர்களுக்கான உதவிகளை வழங்குவதுடன், ஈழ அகதிகள் நாடு திரும்புவது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்கள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கும் உரிய தரப்புக்களிடம் கோரிக்கை முன்வைக்கப்படும் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 22.03.2025 அன்று சனிக்கிழமை விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தச் செயற்பாட்டினை முன்னெடுத்துவரும் ஒபர் சிலோன் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இது ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்தியாவில் தங்கியுள்ள தாயகத்தின் அகதிகள் அனைவரும் நாடு திரும்ப வேண்டும் என்பதே வட மாகாணத்தில் உள்ள ஆயிரக்கணக்கானவர்களின் விருப்பம் என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த காலங்களில் இவ்வாறு இந்தியாவிலிருந்து வந்த ஒவ்வொருவர் தொடர்பான விவரங்களையும் பெற்று அவர்களுக்கு எத்தகைய தேவைகள் இன்னமும் இருக்கின்றன என்பதை அறிந்து அதனை உடனடியாக பூர்த்திசெய்யவேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

ஒபர் சிலோன் நிறுவனத்தின் திட்டத் தலைவர் செல்வி சின்னதம்பி சூரியகுமாரி, தமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும், எதிர்பார்ப்புத் தொடர்பிலும் விவரித்தார்.

இலங்கையிலிருந்து 4 கட்டங்களாக இந்தியாவுக்கு 334,797 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர் என்றும் தற்போது தமிழகத்தில் 103 முகாம்களில் 58,104 பேர் இருக்கின்றனர் என்ற தரவுகளையும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் தெரியப்படுத்தினர். தற்போது தமிழகத்தில் முகாம்களிலுள்ள 58,104 பேரில், 50,620 பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டனர். 2009ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வடக்கு மாகாணத்துக்கு 14,531பேர் வருகை தந்துள்ளனர் என்றும் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

தமிழகத்தில் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்புவதற்கு நிலையான கட்டமைப்பு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் என்றும், இலங்கை, இந்திய அரசாங்கள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை தேவை என்றும், இலங்கையில் அரசியல் உறுதிபாடு அவசியம் எனவும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர்.

மேலும் தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளுக்கு இலங்கை மற்றும் வடக்கு மாகாணம் தொடர்பான மிகைப்படுத்தப்பட்ட அல்லது போலியான தகவல்கள் வழங்கப்படுகின்றமையும் அவர்கள் நாடு திரும்புவதற்கு சவாலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் நாடு திரும்பிய ஈழ அகதிகள் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர் என்றும், இலங்கைக்கு நாடு திரும்புவர்கள் இங்கிருந்து சென்றவர்களின் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையினர் என்பதால், இலங்கையில் அவர்களது பூர்வீக பிரதேசத்தை அடையாளம் காண்பதிலும், அவர்களின் காணிகளைக் கண்டறிவதிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்ற விடயமும் ஆளுநரின் கவனத்துக்கு ஒபர் சிலோன் நிறுவனத்தால் கொண்டு வரப்பட்டது.

கொள்கை ரீதியான ஆவணம் ஒன்றை ஒபர் சிலோன் நிறுவனம் தயாரித்து வழங்கிய பின்னர் அதனை அடிப்படையாக வைத்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். நாடு திரும்ப விருப்பமானவர்களின் பட்டியலை ஒபர் சிலோன் நிறுவனம், வடக்கின் 5 மாவட்டச் செயலர்களுக்கு வழங்கிய பின்னர் அவர்களுக்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாவட்டச் செயலர்கள் மேற்கொள்வார்கள் என ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேவேளை, தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளில் பலர் தாதியர் கற்கைநெறியை முடித்தவர்கள் எனவும், விளையாட்டுத்துறையில் சாதித்தவர்கள் எனவும் சுட்டிக்காட்டிய ஒபர் சிலோன் நிறுவனத்தினர், வடக்கு மாகாணத்தின் சொத்தான அவர்களை இழக்கக் கூடாது எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

தமிழகத்திலிருப்பவர்களை வலுக்கட்டாயமாக நாட்டுக்கு அழைத்துவர முடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், வரவுள்ளவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கத் திட்டமிடுமாறும் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஒபர் சிலோன் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், மேலதிக மாவட்டச் செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், சமுர்த்திப் பணிப்பாளர்கள், மாவட்டப் பதிவாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.





# யாழ்ப்பாணத்தில் ஆசிரியரை தாக்கிய நிதி நிறுவன முகாமையாளரின் தாயாரும் சகோதரிகளும் கைது!

தனியார் நிதி நிறுவனத்தின் முகாமையாளர் ஒருவர் அயல் வீட்டில் உள்ள ஆசிரியரை மண்வெட்டியால் தாக்கிய நிலையில் பாதிக்கப்பட்ட நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்ச சம்பவமானது கடந்த 22.03.2025 அன்று அச்சுவேலி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பாதிக்கப்பட்ட நபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக தாக்குதலை மேற்கொண்ட முகாமையாளருக்கு துணைபோன தாயார் மற்றும் இரண்டு சகோதரிகள் இன்றையதினம் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இருப்பினும் தாக்குதலை நடாத்தியவர் ஆஜராகவில்லை.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் இணைவழி மூலம் நிதி மோசடி செய்யும் சதி அதிகரிப்பு என பொலிஸாருக்கு நீதிமன்றின் அறிவிப்பு!

அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஒன்லைன் மூலமாக நிதி மோசடி இடம்பெற்று வருகின்றது. இதன்மூலம் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இவ்வாறான நிதி மோசடிகள் ஊர்காவற்துறை பகுதியில் மாத்திரம் நான்கு இடம்பெற்றுள்ள நிலையில் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்குகளும் நடைபெற்று வருகின்றன. இந்த ஒன்லைன் மோசடிகள் பல்வேறு வகையில் இடம்பெற்று வருகின்றன.

நிகழ்நிலை செயலி (online App) ஒன்றினை மக்களிடையே பகிர்ந்து அதில் முதலீடு செய்யுமாறு ஊக்குவிக்கப்படுகிறது. அந்த செயலியில் ஆரம்பத்தில் சிறிய தொகையை முதலிடுவதன் மூலம் சிறிய அளவிலான கொடுப்பனவு வழங்கப்படுகிறது. மக்கள் முதல் வருமானத்தை நம்பி அடுத்த தடவை பெரிய ஒரு தொகையை முதலீடு செய்யும் பட்சத்தில் அந்த நிதியானது மோசடியாளர்களால் அபகரிக்கப்படுகிறது.

மேலும், வங்கி கணக்கில் பணத்தினை வைப்புச் செய்துள்ளவர்களது கணக்கு இலக்கங்கள் மற்றும் அடையாள அட்டை இலக்கங்கள் என்பன ஆசை வார்த்தை கூறி மக்களிடமிருந்து மோசடியாளர்களால் பெறப்படுகிறது. பின்னர் அவர்களது கைபேசிக்கு இரகசிய இலக்கம் அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து அந்த இரகசிய இலக்கமானது பெறப்பட்டு அவர்களது வங்கிக் கணக்கில் உள்ள பணம் மோசடி செய்யப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் சமகாலத்தில் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து காணப்படுகின்றன. ஊர்காவற்துறை நீதிமன்றத்திலும் இவ்வாறான வழக்குகள் காணப்படுகின்றபடியால் மக்களுக்கு இது குறித்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்துமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.



# நால்வர் மீதான தடை குறித்த பிரித்தானிய அரசின் அறிவிப்பு நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்றே — சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு!

இலங்கையில் தமிழர்கள் மீதான இன அழிப்பு யுத்தத்தில் ஈடுபட்ட இலங்கை ஆயுதப்படையின் முன்னாள் தலைவர் சவேந்திர சில்வா, கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட, இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் இலங்கை இராணுவத்தின் சார்பாக செயற்பட்ட துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் மீது பிரித்தானியா விதித்துள்ள தடை ஈழத்தமிழர்களின் நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்று எனவும், அந்த அறிவிப்பை தாம் வரவேற்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ள சிறீதரன் எம்.பி, இவ்விடயம் சார்ந்து அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வுகளுக்கு முன்னதாக, இனப்படுகொலையின் பங்குதாரர்களான நால்வர் மீது பிரித்தானிய அரசு விதித்துள்ள பயணத்தடை, காலம் தாழ்த்தியாவது தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மீள அரும்பச் செய்திருக்கிறது. இலங்கையில், குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் மீது பேரினவாத அரசு வலிந்து நடாத்திய போரின்போது மோசமான மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட இந்த நான்கு பேர் மீதும் பிரித்தானிய அரசு விதித்திருக்கும் தடையையும், சொத்து முடக்க அறிவிப்பையும், சர்வதேச நீதிகோரும் பயணத்தில் தமக்கு கிடைத்திருக்கும் ஒரு சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்றாகவே ஈழத்தமிழர்கள் பார்க்கிறார்கள்.

எண்பது வருடங்களுக்கு மேலாக கேட்பாரற்று படுகொலை செய்யப்பட்ட தமிழ்த்தேசிய இனத்தின் எண்ணங்களுக்கும் இறந்துபோன ஆத்மாக்களுக்கும் இந்தத் தடை அறிவிப்பு தமக்கான நீதியின் கதவு திறக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது. காலனித்துவ ஆட்சி முடிவில், சுதேசிகளான தமிழர்களின் இறைமையை பிறிதோர் இனத்தவரிடம் ஒப்படைத்துச் சென்றமை வரலாற்றுத் தவறு என்பதை உலகம் இப்போதாவது உணரத்தலைப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றுள்ளது.

# காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த குடும்பஸ்தர்!

5 நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் 25-03-2025 அன்றையதினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி - தர்மபுரம், உழவனூர் பகுதியை சேர்ந்த நடராசா இன்பராசா (வயது 56) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குடும்பஸ்தருக்கு கடந்த 19ஆம் திகதி இரவு காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில் சிகிச்சை பெறுவதற்காக அடுத்தா நாள் காலை தர்மபுரம் வைத்தியசாலைக்கு சென்றார். இதன்போது மேலதிக சிகிச்சைக்காக அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அதன்பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த நபர் சிகிச்சை பலனின்றி 25-03-2025 அன்று அதிகாலை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் ஒருவரின் வங்கி ஏ.ரி.எம். அட்டையைத் திருடி மதுபானம் கொள்வனவு செய்த பெண் உட்பட நால்வர் மறியலில்!

யாழ்ப்பாணத்தில் ஏ.ரி.எம். அட்டையைத் திருடி மதுபானம் கொள்வனவு - செய்த பெண் உட்பட நால்வர் மறியலில் அடைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

வீடான்றில் இருந்து 95 ஆயிரம் ரூபா மற்றும் தன்னியக்க பணப்பரிமாற்ற அட்டை என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் உட்பட நால்வர் கோப்பாய் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களை எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஒருவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டு நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் அவர் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைகளின் அடிப்படையில் அந்த வீட்டில் பணிபுரிந்த பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

தொடர் விசாரணைகளிலும், பாதுகாப்புக் கமராப் பதிவுகளின் அடிப்படையிலும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட மூவரும் திருடப்பட்ட தன்னியக்கப் பணப்பரி மாற்ற அட்டையைக் கொண்டு 20 ஆயி ரம் ரூபாவை எடுத்து மதுபானம் கொள் வனவு செய்துள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டபோது அவர்களைவிளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகள் கோப்பாய் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்டிருந்த இருவரின் உடல்களின் எச்சங்கள் 38 ஆண்டுகளின் பின் தீயுடன் சங்கமம்!

யாழ்ப்பாணத்தில் இருவரின் உடல்கள் புதைக்கப்பட்டு 38 ஆண்டுகளின் பின் அவற்றின் எச்சங்கள் தோண்டியெடுக்கப்பெற்று தீயுடன் சங்கமமாகிய சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட தாயினதும், அவரது மகனினதும் உடல் வீட்டு வளாகத்துக்குள் அடக்கம் செய்யப்பட்டிருந்த நிலையில், கொல்லப்பட்ட பெண்ணின் பிள்ளைகள் வெளிநாடு ஒன்றிலிருந்து சென்று அந்த உடல்கள் நீதிமன்ற அனுமதிபெற்று மீள எடுக்கப்பட்டு மார்ச் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமய முறைப்படி தகனக் கிரியைகள் நத்தப்பட்டுள்ளன.

1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் யாழ்ப்பாணம் நோக்கி மேற்கொண்ட படை நடவடிக்கையில், கண்டி வீதியில் உள்ள வீடொன்றில் இருந்த தாயும் அவரது மகனும் இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருந்தனர்.

உயிரிழந்தவர்களுக்கு சமய முறைப்படி கிரியைகள் செய்து தகனம் செய்வதற்கு அப்போது அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில், கணவர் வேறு வழியின்றி தனது மனைவியினதும், மகனினதும் உடலை வீட்டுவளவிலேயே அடக்கம் செய்துள்ளார். பின்னர் அங்கு கல்லறை ஒன்றைக் கட்டிவிட்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் ஏனைய பிள்ளைகளுடன் அவர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தனது ஏனைய பிள்ளைகளுக்கு அவர் தெரிவித்திருந்ததுடன், மனைவி மற்றும் மகன் ஆகியோருக்கு சமய முறைப்படி இறுதிக் கிரியைகள் செய்யவேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அவர் கடந்த ஆண்டு உயிரிழந்த நிலையில், தந்தையின் ஆசையை நிறைவேற்றுவதற்காக நாடு திரும்பிய ஏனைய பிள்ளைகள் தாய் மற்றும் சகோதரனின் உடல்களை மீளத் தோண்டியெடுத்து கிரியைகள் செய்வதற்காக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரியிருந்தனர்.

நீதிமன்று அனுமதி அளித்ததைத் தொடர்ந்து சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டு இந்து சமயக் கிரியைகள் நடாத்தப்பட்டு அவர்களின் உடல் எச்சங்கள் மீட்கப்பட்டுத் தகனம் செய்யப்பட்டுள்ளன.

# இலங்கை அரசின் சூழ்ச்சியினால் யாழ்ப்பாணம் மாநாகர சபைக்கான வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றம் செல்லவுள்ளதாக தொழிலதிபர் சுலக்சன் அதிரடி!

மத்திய அரசின் சூழ்ச்சியே யாழ் மாநாகரில் எமது வேட்பு மனு நிராகரிப்புக்கு காரணம் என சுட்டிக்கட்டியுள்ள தொழிலதிபர் ஞானபிரகாசம் சுலக்ஷன் தலைமையிலான சுயேச்சைக் குழு வரும் 28-03-2025 வெள்ளியன்று குதித்த தீர்மானத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றை நாடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் 24ம் திகதி அன்றையதினம் வேட்புமனு நிரகரிப்பு தொடர்பில் ஊடக சந்திப்பை மேற்கொண்டு இவ்வாறு தெரிவித்த குறித்த சுயேச்சை குழுவின் தலைவர் சுலக்சன் மற்றும் வேட்பாளர் விஜயகாந்த் ஆகியோர் இவ்வாறு தெரிவித்துள்ளதுடன் மேலும் கூறுகையில்,


எமது சுயேச்சைக் குழு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தொழிலதிபர் ஞானபிரகாசம் சுலக்'ன் தலைமையில் யாழ்ப்பாணம், கோப்பாய், வேலணை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் சுயேச்சைக் குழுவாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்தது.




இதில் யாழ். மாநகரின் வேட்புமனு பெண் வேட்பாளரது உறுதியுரை குறித்த விடயம் தொடரிலான சர்ச்சையால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாம் சட்டத்தின் பிரகாரமே வேட்புமனுவை சமர்ப்பித்திருந்தோம்.

அதன்படி யாழ். மாநகரில் எமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் குதித்து நாம் சட்ட ஆலிசகர்களுடன் ஆலோசனை செய்துள்ளோம்.

அதன்படி தேர்தல் திணைக்களத்தின் இந்த அறிவுப்புக்கு எதிராக நாம் நியாயம் கோரி எதிர்வரும் வெள்ளிக்கிழமை உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யவுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# போராட்டத்தில் குதித்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பீட மாணவர்கள்!

யாழ். பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பீட மாணவர் சங்கம் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட முன்றலில் இருந்து 26ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் கவனயீரப்புபோராட்டம் ஒன்றில் ஈடுபட்டு பேரணியாக யாழ் நகரிற்கு செல்ல முற்பட்ட பொழுது பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில் திருநெல்வேலி சந்தியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் பொழுது இலவசக்கல்வியால் உருவான அரசு பல்கலைக்கழகங்களில் பயிலும் பட்டதாரிகளையும் அரச தொழிலில் இணைபத்தற்கு நியாயமான வேலைவாய்ப்பு கொள்கையை உருவாக்கு உள்ளக பயிற்ச்சியை உடனடியாக வழங்கு எனும் தொனிப்பொருளில் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

நியாயமற்ற தேர்வு பரிட்சை முறையை உடனடியாக நிறுத்து, ஆட்சி மாறியது போல பட்டதாரிகளின் வாழ்க்கை மாறுமா, நியாயமற்ற தேர்வு பரிட்சையால் கேள்விக்குறியாகப்பட்டதாரிகளின் கனவு, தாதியர் பட்டதாரிகளை உடனடியாக அரச சேவைக்கு அமர்த்து, மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞான பட்டதாரிகளை உடனடியாக வேலைக்கு அமர்த்து ஆகிய கோஷங்களை அனுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் போலீஸ் நிலையங்களிலிருந்து அதிகளவு போலீசார் குவிக்கப்பட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் கிஸ்னுயன் பின்வருமாறு தெரிவித்தார் தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் இருந்து தாதியியல், மருந்தாக்கவியல், மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானம், ஆகிய பதவி நிலை வெற்றிடங்களுக்கு புதிதாக ஆட்களை உள்ளீர்ப்பதற்காக அரச பல்கலைக்கழகங்களில் முன்னபோதும் இல்லாத வகையில் பொது உளர் சார்பு பரீட்சை இணை சுகாதார அமைச்சு அறிமுகப்படுத்தி உள்ளது. இந்தப் பரீட்சை எமக்கு தேவையற்ற ஒன்று எனவும் நான்கு வருடங்கள் அரச பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற எமக்கு வேலை வாய்ப்புகளை உடனடியாக வழங்க வேண்டும் இவ்வாறான தடை தாண்டல் பரீட்சைகள் எங்களுடைய தகுதியை தீர்மானிப்பதாக அமையவில்லை மேலும் இதுவரை காலமும் பாடப்பெறுமதிக்கான தரப்புள்ளி சுட்டெண் (GPA) இன் அடிப்படையிலேயே பல்கலைக்கழகம் மூலம் பதவி நிலை வெற்றிடங்கள் நிரப்பப்படும். ஆனால் தற்பொழுது ஜிபிஏ சுட்டங்களை கொண்டிருக்காத தகுதியற்றவர்கள் கூட வேலை வாய்ப்பு இணைத்துக்கொள்ளப்படலாம் ஆகவே இது நிறுத்தப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸ் புலனாய்வாளர்கள் மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் குறித்த பகுதிக்கு விரைந்து போராட்ட களத்தை நோட்டமிட்டு சென்றமையை அவதானிக்க முடிந்தது.







இலங்கை செய்திகள் Sri Lanka News

# வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் ஆகியன தம்வசம் உள்ள காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்படும் என்கிறார் வடக்கு ஆளுனர் நா.வேதநாயகன்

பு. கஜிந்தன்



வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் விடுவிக்க இணங்கிய காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு, அடுத்த மாதம் 9ஆம் திகதி (09.04.2025) நடைபெறவுள்ள உயர்மட்டக் கலந்துரையாடலில் கோருவது என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் 25.03.2025 அன்று செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் மீள்குடியமர்வு, அபிவிருத்தி, விவசாயம், சுற்றுலாத்துறை என எந்தவொரு விடயத்தையும் மேற்கொள்ள முடியாதளவுக்கு வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் முட்டுக்கட்டைகள் தொடர்ச்சியாகப்போடப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் விசனம் வெளியிட்டார்.

கிளிநொச்சிக்கு வருகை தந்த காணி ஆணையாளர் நாயகத்திடம் இது தொடர்பில் முறையிட்ட நிலையில், அவர் இந்த விடயத்தை கௌரவ விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்பாசன அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் அதற்கு அமைவாக எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உயர்மட்ட குழுக் கலந்துரையாடலுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பவற்றால் ஒவ்வொரு மாவட்டங்களிலும் விவசாய நிலங்கள், மேய்ச்சல் தரவைகள், குளங்கள், வயல்கள், மக்கள் மீள்குடியமர்வுக்கான காணிகள் என்பன எவ்வளவு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பில் மாவட்ட ரீதியாக விவரங்களை தயாரிக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதன்போது அரச காணிகள் மாத்திரமே, ஒதுக்கக் காணிகளாக அரச திணைக்களங்களால் அறிவிக்க முடியும் எனவும் தனியார் காணி எனின் அதனைச் சுவீகரித்தே ஒதுக்க காணிகளாக அறிவிக்க முடியும் என்றும சட்டஏற்பாடு உள்ளபோதும் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன அதனைப் பின்பற்றாமல் வர்த்தமானியை வெளியிட்டுள்ளன என ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலஅளவத் திணைக்களத்தின் வரைபடத்துக்கு அமைவாக வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்தன என்றும், 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் கூகுள் வரைபடத்தின் உதவியுடன் அந்தத் திணைக்களங்கள் நேரடியாக தமக்குரியதாக அடையாளப்படுத்தும் காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்துள்ளன என்ற தகவலும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

வடக்கில் சில மாவட்டங்களில் வனவளத் திணைக்களத்துக்குரிய காணிகள், வனவளத் திணைக்களத்துக்கு என அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணிகள் என்பனவற்றை விடுத்து மக்களின் வயல்காணிகளாக உள்ளவற்றுக்குள்ளும் வனவளத் திணைக்களத்தின் எல்லைக் கல்லுகள் போடப்பட்டுள்ளன என அதிகாரிகள் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினர்.

அதேநேரம் சில இடங்களில் வனவளத் திணைக்களமும், வனஉயிரிகள் திணைக்களமும் ஒரே காணிகளையே தமக்குரியதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

கடந்த ஆண்டு வடக்கின் 5 மாவட்டங்களில் விடுவிப்பதற்கு வனவளத் திணைக்களம் இணங்கிய காணிகளின் அளவுகளை விட புதிதாக தமது திணைக்களத்துக்கு கோரும் காணியின் அளவு அதிகம் என்றும் ஆளுநரின் கவனத்துக்கு அதிகாரிகள் கொண்டு சென்றனர். வனவளத் திணைக்களத்தால் சில இடங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டபோதும் அங்கு மக்கள் மிக நீண்டகாலமாக வசித்துவருகின்றனர்.

ஆனால் அவர்களுக்கான சட்டபூர்வ ஆவணங்களோ, வீட்டுத்திட்ட உதவிகளோ முன்னெடுக்க முடியாத நிலைமை இருப்பதாகவும், அதேபோன்று சட்டபூர்வமான ஆவணங்கள் உள்ள ஒருதொகுதி மக்கள் வர்த்தமானி அறிவித்தலால் தமது வசிப்பிடங்களில் குடியேற முடியாத நிலைமை இருப்பதாகவும் ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அரச அதிகாரிகள் அபிவிருத்தித் தேவைக்காக காணிகளை விடுவிக்குமாறு வனவளத் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைத்தால் அது நிராகரிக்கப்படும் அதேவேளை, தனியார் முதலீட்டாளர்கள் அல்லது வர்த்தகர்கள் முன்வைக்கும் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு காணிகளை விடுவிக்கும் செயற்பாடுகளும் வடக்கில் நடைபெறுவதாக அதிகாரிகள் ஆளுநரிடம் குறிப்பிட்டனர்.

இதேநேரம், இந்தத் திணைக்களங்களின் பாகுபாடான செயற்பாடுகள் தொடர்பிலோ அல்லது அந்தத் திணைக்களங்களின் நடவடிக்கைகள் தொடர்பிலோ வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கேள்வி எழுப்பினால், மேற்படி இரண்டு திணைக்களங்களின் உயர் அதிகாரிகளால் அவமரியாதை செய்யப்படுவதாகவும் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டினர்.

இந்த விடயங்களைக் கவனத்திலெடுப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், எதிர்வரும் 9ஆம் திகதி கலந்துரையாடலுக்கு முன்னர் வடக்கு மாகாணத்தின் விவரங்களை உரிய வகையில் தயார் செய்யுமாறும், கடந்த காலங்களில் எதிர்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் இரு திணைக்களங்கள் தொடர்பிலான விடயத்தை அணுகுவோம் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கின் 5 மாவட்டங்களினதும் மேலதிக மாவட்டச் செயலர்கள் - காணி, வடக்கு மாகாண காணி ஆணையாளர், பிரதி நில அளவையாளர் நாயகம் - வடக்கு, ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் – காரைநகர் வீதியில் தனியார் பேருந்துகள் நடத்திய "ஓட்டப்போட்டி"! பீதியில் பார்த்து திகைத்து நின்ற பொதுமக்கள்!



யாழ்ப்பாணம் - காரைநகர் வீதியில் இரு தனியார் பேருந்துகளின் ஓட்டப்போட்டியால் வீதியில் சென்ற மொதுமக்கள் மரண பயத்தில் வீதியில் சென்றதை அவதானிக்க முடிந்தது. இச்சம்பவம் 23ம் திகதி அன்று காலை 10.15 மணியளவில் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

கீரிமலையிலிருந்து யாழ். நகர் நோக்கிச் சென்ற தனியார் பேருந்தும், காரைநகரிலிருந்து யாழ்.நகர் நோக்கிச் சென்ற தனியார் பேருந்துமே இவ்வாறு ஓட்டப் போட்டியில் ஈடுபட்டு மக்களை கதிகலங்க வைத்தன. மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் ஆரம்பித்த போட்டி ஆறுகால் மடம்வரை தொடர்ந்தது.

இதில் கீரிமலை - யாழ்ப்பாணம் தனியார் பேருந்து சாரதி சமிக்கை விளக்கினை உரியமுறையில் ஒளிரவிட்டு பேருந்துனை செலுத்தியபோதும் காரைநகர் - யாழ் பேருந்து சாரதி சமிக்கை விளக்கினை உரியமுறையில் ஒளிரவிடாது தாறுமாறாக பேருந்துனை செலுத்தியதனை அவதானிக்கமுடிந்தது.

கீரிமலை பேருந்துனை முந்துவதற்கு பலமுறை முயற்சித்த காரைநகர் பேருந்து சாரதி ஆறுகால் மடத்திற்கு பின்பு மெதுவாக சென்றது. இதனால் பலரை தனியார் பேருந்துகள் ஏற்றாது சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

# யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்கான கூட்டத்தில் "ஆளுமையற்ற ஒருங்கிணைப்புக் குழு தலைவர்" என்று கூறிவிட்டு – வெளியேறிய பாராளுமன்ற உறுபிப்பினர் சிவஞானம் சிறீதரன்!

## மீன்வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரன் தொடர்பாகவே இந்த கண்டன வீச்சு இடம்பெற்றதாகத் தகவல்





"யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்கான கூட்டம் என்று அதிகாரிகளை அழைத்து, அழைத்தவர்களாலேயே அதிகாரிகள் மீது குறைகளும் குற்றச்சாட்டுக்களும் முன்வைத்து நேரத்தை வீணாக்கும் செயற்பாடானது ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இயலாமையே" என சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன், ஆழுமையற்ற தலைவரின் கீழ் நடக்கும் கூட்டத்தில் இருப்பது மக்களை நாம் ஏமாற்றுவதாக காணப்படுவதால் தான் கூட்டத்தில் இருந்து வெளியேறியதாக தெரிவுத்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.

இதன்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை ஆராயாது சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நோக்கமாக கூட்டத்தை நகர்த்திச் சென்றனர்.

ஆனால் உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்படுள்ள நிலையில் சட்டத்தின் பிரகாரம் குறித்த கூட்டத்தில் அரசியல் நோக்கங்களுக்கான விவாதங்கள் முன்மொழிவுகள் எவையும் இடம்பெறக் கூடாது. இன்று அரசியலே கூட்டமாக காணப்பட்டது. அதைவிட தனிப்பட்ட தாக்குதல்களும் அவதூதுகளும் அதிகளவு இருந்தது.


இதை கூட்டத்துக்கு தலைமை தாங்கும் நபர் கட்டுப்படுத்த வேண்டும். அதுவே தலைமையின் பணியும் ஆகும். ஆனால் ஒருங்கிணைப்புக் குழு தலைவரால் அதை கட்டுப்படுத்தும் இயலுமை காணப்படவில்லை.

அந்தவகையில் ஆழுமையற்ற தலைமையின் கீழ் நடக்கும் கூட்டத்தில் ஆராயப்படும் தீர்மானங்களுடன் கூட்டத்தில் இருப்பதும் பிரயோசனமற்றது. எனவே இந்த கூட்டத்தில் இருந்து நேரத்தை வீணடிப்பது தேவையற்றது என்பதால் தான் கூட்டத்தில் இருந்து வெளியேறிச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார். இது இவவாறிக்க.

இலங்கையின் மீன்வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரன் தொடர்பாகவே இந்த கண்டன வீச்சு இடம்பெற்றதாக யாழ்ப்பாண செயலக வட்டாரத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டதாகவும் எமது செயதியாளர் அறிவித்துள்ளார்.



# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் புதிய கூட்டு: புதிய நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புமா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**நா**டாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்படுவதைத் தவிர வேறு வழியில்லை, என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரக்குமார் இந்தியாவிலிருந்து வெளி வரும் "இந்து" பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் கூறியிருக்கிறார்.

புதிய யாப்பு ஒன்று உருவாக்கப்படுமிடத்தில் அந்த யாப்பை நோக்கி கட்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. தமிழர்கள் ஒரு தரப்பாகத் திரண்டு நின்றால்தான் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதனை பலமாக வெளிப்படுத்தலாம். மிகக் குறிப்பாக சுமந்திரனும் அவருடைய கூட்டாளிகளும் இணைந்து முன்பு தாங்கள் தயாரித்த "எக்கிய ராஜ்ய" என்கிற இடைக்கால வரைவை மீண்டும் மேசைக்கு எடுப்பதைத் தடுப்பது என்றால் தமிழ்த் தரப்பு ஐக்கியப்படுவது தவிர்க்க முடியாது.

அதே சமயம் யாப்பை நோக்கி மட்டும் தமிழ்த் தரப்பு ஐக்கியப் படக்கூடாது, மாறாக தேர்தல்களை நோக்கியும் சமோசிதமான தந்திரோபாயமான கூட்டுக்களுக்குப் போக வேண்டும். அல்லது குறைந்த பட்சம் போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கைகளுக்காவது போக வேண்டும் என்பதனை நான் தொடர்ச்சியாகச் சுட்டிக் காட்டி வந்திருக்கிறேன்.

அதற்கு ஒரு அடிப்படைக் கோட்பாட்டு விளக்கம் உண்டு. தேர்தல் கூட்டுகள் பெரும்பாலும் தந்திரோபாயமானவை. ஆனாலும் தமிழ் மக்கள் ஒரு தரப்பாக தங்களை பலப்படுத்த வேண்டும் என்று சிந்தித்தால், தேர்தலுக்கும் அங்கே ஒரு பங்கு உண்டு. தேர்தலில் தமிழ் மக்கள் ஒரு தரப்பாகத் தோற்கும் பொழுது பின்னர் நாடாளுமன்றத்தில் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தரப்பு பலமாக நின்று பேச முடியாது. எனவே ஒரு தரப்பாக தமிழ் மக்களைப் பலப்படுத்துவது என்று பார்த்தால் அது நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்று எல்லாத் தேர்தல் களங்களிலும் தமிழ் தரப்பை ஆகக்குறைந்த பட்சம் தந்திரோபாய நோக்கத்தோடாவது ஒருங்கிணைக்க வேண்டும்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தந்திரோபாய கூட்டுக்களுக்குத் தயாராக இல்லை. அவர்கள் கொள்கை வழிக் கூட்டுக்களுக்கே தயாராக இருப்பதாகக் கூறிக் கொள்கிறார்கள்.

கடைசியாக இயங்கிய உள்ளூராட்சி சபைகளின் கடைசி கட்டத்தில் காரைநகரில் ஒரு பிரச்சினை வந்தது. அங்குள்ள சுயேட்சைக் குழு தமிழ்த் தேசியக் கட்சிகளோடு இணைந்து ஆட்சி அமைக்க விரும்பியது. அது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு நான் உரையாடினேன். அவர்கள் எந்தவிதமான நிபந்தனையும் இன்றி குறிப்பிட்ட சுயேட்சைக் குழுவுக்கு ஆதரவளிக்க முன்வந்தார்கள். அதே சமயம் அந்த உரையாடலின் போது, செல்வராசா கஜேந்திரன் என்னிடம் சொன்னார், "அண்ண இது போன்ற விடயங்களில் நீங்கள் என்ன கேட்டாலும் நாங்கள் செய்வோம். ஆனால் ஐக்கியத்தைப் பற்றி மட்டும் கேட்டு விடாதீர்கள்" என்று.

அந்தளவுக்கு அவர்களுக்கு ஐக்கியம் அலர்ஜிக்காக இருந்தது. இருக்கலாம். அரங்கில் நம்பிக் கூட்டுச்சேர முடியாத சக்திகளே அதிகமாக இருக்கலாம். ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால், ஒரு தரப்பாக தமிழ் மக்களை பலப்படுத்துவது என்று சொன்னால் அதனை தந்திரோபாயமாகத்தான் செய்யலாம். அதுவும் தேர்தல் வழியில் தந்திரங்கள்தான் அதிகம்.

நான் திரும்பத் திரும்பக் கூறும் ஒரு உதாரணத்தைத்தான் இங்கேயும் சொல்லலாம். சுத்தமான தங்கத்தை வைத்து ஆபரணங்களைச் செய்ய முடியாது. தங்கத்தில் நகை செய்ய வேண்டுமானால் குறிப்பிடத்தக்க அளவுக்கு செப்பைக் கலக்க வேண்டும் வேண்டும். இந்த பூமியிலே பெரும்பாலான விடயங்கள் அப்படித்தான். அதிலும் அரசியலில், குறிப்பாக தேசியவாத அரசியலில், அதுதான் நடைமுறைச் சாத்தியமானது.

அரசியலில் புதுமையானது, முழுமையானது, புனிதமானது, சரியானது, பிழையானது...போன்ற அனைத்துமே சார்புக் கணியங்கள்தான். ஒப்பீட்டு முடிவுகள்தான். நடைமுறை வாழ்வில் முழுப் புனிதமானது எதுவும் இல்லை. முழுத் தூய்மையானது எதுவும் இல்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி இப்பொழுது உருவாக்கியிருக்கும் கூட்டில் இருப்பவர்களில் அநேகர் முன்பு வெவ்வேறு கூட்டுக்களில் இருந்தவர்கள்; வெவ்வேறு தரப்புகளோடு சேர்ந்து உழைத்தவர்கள். இறந்த காலத்தைக் கிண்டினால் யாருமே புனிதரில்லை. ஏன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தான். கஜேந்திரக்குமாரின் தகப்பனார் குமார் பொன்னம்பலம் இந்திய -இலங்கை உடன்படிக்கையின் பின்னணியில் 1980களின் இறுதிக் கட்டத்தில் கொழும்பில் உள்ள தனது இல்லத்தின் பாதுகாப்புக்கு புளட், டெலோ ஆகிய இயக்கங்களின் ஒத்துழைப்பைப் பெற்றிருந்தார். அவருடைய வீட்டுக்கு பாதுகாப்பு பணிக்காகச் சென்ற தமது அனுபவத்தை ஏற்கனவே சிவாஜிலிங்கம் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். புளொட் இயக்கத்தின் சிவநேசனும் அவ்வாறு கூறியுள்ளார். ஆனால் அதற்காக பின்னாளில் குமார் சிந்திய இரத்தத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. அதுதான் அரசியல்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தந்திரோபாயமாகக் கூட்டுக்களை வைத்துக் கொள்வதற்குத் தயாராக இல்லை. கொள்கை வழிக் கூட்டுக்கே தங்கள் தயார் என்று திரும்பத் திரும்பக் கூறி வருகின்றது. தங்கள் கொள்கையில் வழுக்காதவர்கள் என்று கூறுவதன் மூலம் மற்றவர்களை கொள்கைகளில் வழுக்கியவர்கள் என்று முத்திரை குத்தி வந்தது. அதன் விளைவாக கடந்த 15 ஆண்டுகளாக அவர்களால் தாங்கள் முன்வைக்கும் இலட்சியத்தை நோக்கி அவர்களுடைய சொந்தக் கட்சியையும் கட்டியெழுப்ப முடியவில்லை; தமிழ் மக்களையும் கட்டி எழுப்ப முடியவில்லை.

இப்பொழுது யாப்புருவாக்க முயற்சியில் தமிழ் மக்கள் பேரவையின் முன் மொழிவின் அடிப்படையில் ஒன்று சேர வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் பேரவையை செயல்படாத நிலைக்கு தள்ளியதில் அவர்களுக்குப் பொறுப்பு இல்லையா? அவர்கள் நினைத்திருந்தால் தமிழ் மக்கள் பேரவையை அதன் அடுத்த கட்டக் கூர்ப்புக்குக் கொண்டு போய் இருந்திருக்கலாம். பேரவை என்ற தாயின் முடிவுக்குக் காரணமாக இருந்து கொண்டு அந்தத் தாய் ஈன்ற பிள்ளையாகிய முன்மொழிவை இப்பொழுது காவுகின்றார்கள்.

அப்படித்தான் பொது வேட்பாளரின் விடயத்திலும் முன்னணி அந்த கூட்டுக்குள் இணைந்து இருந்திருந்தால் நிலைமை வேறு விதமாகப் போயிருக்கும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நிகழ்ந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால் தொடக்கத்தில் இருந்தே பொது வேட்பாளரை முன்னணி எதிர்த்தது. மட்டுமல்ல, பொது வேட்பாளருக்கு ஆதரவானவர்களை இந்தியாவின் ஏஜென்ட்கள், முதுகெலும்பில்லாதவர்கள் என்று கூறினார்கள். பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் சந்திப்புகளின்போது குடிமக்கள் சமூகத்தை சேர்ந்தவர்களை நோக்கி கஜேந்திரன் பின்வருமாறு சொன்னார் "இந்த முயற்சியில் நீங்கள் வெற்றி பெற்றால் நாங்கள் இப்பொழுது வைத்திருக்கும் இரண்டு ஆசனங்களையும் இழந்து விடுவோம் என்று எங்களுக்குத் தெரியும். அதை நன்கு தெரிந்து கொண்டுதான் உங்களை எதிர்க்கிறோம்" என்று.

ஆனால் பொது வேட்பாளருக்கு முன்னணியின் ஆதரவாளர்கள் பலரும் வாக்களித்தார்கள். தேர்தல் முடிவுகளின் பின் பொது வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளை கஜேந்திரக்குமார் தமிழ்த் தேசியத் தன்மை மிக்க வாக்குகள் என்று கூறினார். அதெப்படி வெளிநாட்டின் ஏஜென்ட்கள் தமிழ் தேசிய தன்மைமிக்க வாக்குகளைத் திரட்டலாம்? கெட்ட கூட்டு எப்படி நல்ல விளைவைத் தரும்?

தமிழ் மக்கள் பேரவையின் சிதைவுக்குக் காரணமாக இருந்த ஒரு தரப்பு கிட்டத்தட்ட ஐந்தாண்டுகளின் பின் அதே பேரவையின் முன் மொழிவை கையில் எடுத்திருப்பது எதை காட்டுகின்றது? ஐந்து ஆண்டுகளுக்கு முன் அவர்கள் எடுத்த முடிவு தீர்க்கதரிசனமற்றது என்பதைத்தானே? பொது வேட்பாளரைத் தவறு என்று கூறிவிட்டு அவர் பெற்ற வாக்குகளை தேசியத் தன்மை மிக்கவை என்று கூறுவது எதை காட்டுகின்றது? எட்டு மாதங்களுக்கு முன்பு அவர்கள் எடுத்த முடிவு தவறானது என்பதைத்தானே? பொது வேட்பாளருக்காக முன்னணியில் நின்று உழைத்த ஒரு சிவில் சமூகச் செயற்பாட்டாளர் கூறுவதுபோல "முன்னணியானது சரியான வேளைகளில் பிழையான முடிவை எடுக்கிறது. பிழையான வேளைகளில் சரியான முடிவை எடுக்கின்றது" என்பது சரியா?

ஆனால் இப்பொழுது முன்னணி எடுத்திருக்கும் முடிவானது சரியான வேளையில் எடுக்கப்பட்ட சரியான முடிவு என்றுதான் தோன்றுகிறது. கடந்த 15 ஆண்டுகால அனுபவத்திலிருந்தும் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் முன்னணி அப்படி ஒரு முடிவை எடுத்திருக்குமாக இருந்தால் அதை வரவேற்க வேண்டும்.

ஒப்பீட்டளவில் பெரிய கூட்டை முன்னணி உருவாக்கியிருக்கிறது. அதை வளர்த்தெடுக்க வேண்டும். ஒப்பீட்டளவில் யார் தேசத்தைத் திரட்டும் நம்பிக்கைகளை பலப்படுத்துகின்றார்களோ, அந்த நம்பிக்கைகளுக்காக உண்மையாக உழைக்கின்றார்களோ, அவர்களை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும். பொது வேட்பாளருக்கு பின் மீண்டும் ஒப்பிட்டளவில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய ஒரு கூட்டை முன்னணி உருவாக்கியிருக்கிறது. அது பிசகலாம் பிசகாமல் விடலாம். ஆனால் தேசமாகத் திரளவில்லை என்றால் உள்ளூராட்சி சபை தேர்தல்களுக்குப் பின் தமிழ் மக்கள் ஒரு தரப்பாக, ஒரு தேசமாக மேலும் மெலிந்து போய் விடுவார்கள்.

## வீணாவின் கவிக்கணை

சில சந்தர்பங்களில்
நீ பயந்து போகலாம்
அதனால்
துவண்டும் போகலாம்
அதற்காக
ஒரே இடத்தில்
அடைந்து
அழுகிப்போகாதே,
குப்பை என்று எண்ணி
உன்னை தூக்கி எறிய
காத்திருப்பவர் முன்
வாழ்ந்து காட்டிடு
கோபுரமாய்.

HSB
CANADA

# SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

Welcome to our Grand Opening!
Be the first to enjoy our delicious offerings!

# GRAND OPENING

2025 March Thursday 27

## MISSISSAUGA BRANCH

4559 Hurontario Street, Unit 12B,
Mississauga, ON L4Z 3L9 905 290 0769

**Scarborough**
1571 Sandhurst Circle,
Unit 153, Scarborough,
ON. M1V 1V2.
Tel: 416 293 7755

**Mississauga**
4559 Hurontario Street,
Unit 12B, Mississauga,
ON. L4Z 3L9.
Tel: 905 290 0769

**Brampton**
295A Queen Street East,
Unit 50, Brampton,
ON. L6W 3R1.
Tel: 905 457 7575

**Delta**
8701 - 120th Street,
Delta, BC
V4C 6R4.
Tel: 778 578 7575

www.saravanabhavan.ca saravanaabhavancanada hsbcanada

NISSAN | VILLAGE NISSAN

# தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
*S CVT* ULTRA-LOW

**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,695 Down

+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
*S* ULTRA-LOW

**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,192 Down

+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 ROGUE**
*S AWD*

**0.99%** | **30** MOS. LEASE

+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com






## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24


# கண்டுகளிக்கத் தயாராகுங்கள்... கனடாவில் மேடையேறுகின்றது நாட்டுக் கூத்து – "இலங்கை வேந்தன்"





# சம்பந்தன், மாவை ஆகியோரின் "மரண வீடு"களும் "கர்மா"வும்

## இழிவான தமிழர் அரசியலின் பிதாமகன் சுமந்திரனே ஆவார்

**"தமிழரசுக்கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தனின் மரண வீட்டில் இழிவான அரசியல் செய்த சுமந்திரனை அதே தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரண வீட்டில் "கர்மா" தாக்கியுள்ளது. எனவே மரணச்சடங்கையே அரசியலுக்கு பயன்படுத்துகின்ற இழிவான அணியொன்று கட்சிக்குள் இருக்கின்றது என சுமந்திரன் ஒப்பாரி வைக்க முடியாது. ஏனெனில் அந்த இழிவான அரசியலின் பிதாமகன் சுமந்திரன்." ---------------------------------------------------------------------- - கே. பாலா ----**

இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் அனைத்து விடயங்களிலும் இரு துருவங்களாக இருக்கும் சிறீதரன், சுமந்திரனுக்கிடையிலான பனிப்போர் அண்மைக்காலமாக நேரடி யுத்தமாக மாறி வருகின்றது. இதில் யுத்தத்தை தொடுப்பவராக சுமந்திரனும் பதிலடித்தாக்குதல் கொடுப்பவராக சிறீதரனும் சளைக்காது போரிடுகின்றனர். தனது மீள் பாராளுமன்ற பிரவேசத்துக்காகவும் சிறீதரனின் இருப்பை அகற்றுவதற்காகவும் சுமந்திரன் வியூகங்கள் அமைப்பதும் அதனை சிறீதரன் உடைப்பதும் தற்போது தமிழரசுக்கட்சிக்குள் இரு படைப்பிரிவுகளின் பலப் பரீட்சையாக நடந்தேறி வருகின்றது.

இதில் யுத்தத்தை தொடுப்பவரான சுமந்திரன் ஒவ்வொரு தடவையும் சிறீதரனிடம் தோல்விகண்டே வருகின்றார். இதில் இறுதி இரு சமர்களைப் பற்றி மட்டும் பார்ப்போம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொது செயலாளராக பதவியேற்ற பின்னர் எம்.ஏ.சுமந்திரன் தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் "பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளினடிப்படையில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திலே எங்களுடைய கட்சியிலே இரண்டாவது இடத்திலே நான் இருக்கிறேன். எங்களுடைய கட்சிக்கு இந்த தடவை ஒரு ஆசனம் கிடைத்த காரணத்தால் மட்டும் தான் நான் பாராளுமன்றத்தில் பிரதிநிதியாக முடியவில்லை. இரண்டு ஆசனங்கள் கிடைத்திருந்தால் நானும் பாராளுமன்றத்தில் இருந்திருப்பேன்.

இந்த தேர்தல் முறைமையின் கீழ் முதலாவது இடத்தை பெற்ற சிவஞானம் சிறீதரன் ஏதாவது காரணத்துக்காக எம்.பி. பதவியிலிருந்து விலகுவாராக இருந்தால் தானாகவே, எவரும் எதுவும் சொல்லாமலே நான் பாராளுமன்ற உறுப்பினராக வருவேன். அதில் எந்தத் தவறும் கிடையாது. விருப்பு வாக்கு அடிப்படையிலே நான் இரண்டாம் இடத்தில் இருக்கிறேன்.எங்கள் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் மாகாண சபை தேர்தல்கள் வருகின்றது என சிறீதரன் சுட்டிக்காட்டியிருந்தார். முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவது தொடர்பாக அவர் நேரடியாக சொல்லவில்லை. ஆனால் மாகாண சபை தேர்தல் வருகிறது. அந்த வகையில் சில மாற்றங்கள் நிகழலாம். சுமந்திரன் அந்த பதவிக்கு வரலாம் என்றும் சொல்லி இருந்தார். அதை நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

வாக்குகள் அடிப்படையில் மாவட்டத்தில் அடுத்த இடத்தில் இருப்பவருக்கு எந்த வேளையும் பாராளுமன்றத்திற்கு செல்ல வேண்டிய ஒரு தேவை ஏற்படலாம். அப்படி வந்தால் பாராளுமன்ற உறுப்பினராக நான் வருவேன். அதற்கு எனக்கு மறுப்பு கிடையாது. தற்போது இருக்கிற சூழ்நிலையில் பாராளுமன்ற தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கிற சூழலில் தேசிய பட்டியல் மூலமாக செல்வது முறையற்றது என்பது என்னுடைய நீண்டகால நிலைப்பாடு என்று கூறியிருந்தார்.

"சிறீதரன் ஏதாவது காரணத்துக்காக எம்.பி. பதவியிலிருந்து விலகுவாராக இருந்தால் தானாகவே, எவரும் எதுவும் சொல்லாமலே நான் பாராளுமன்ற உறுப்பினராக வருவேன்" என்ற சுமந்திரனின் கூற்றால் சிறீதரனின் உயிருக்கு ஏதாவது ஆபத்துக்கள் ஏற்படலாம் என்ற எச்சரிக்கைகள் அரசியல் ஆய்வாளர்கள் மத்தியிலிருந்து வெளிக்கிளம்பிய நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் எண்ணம் இல்லை என சிறீதரன் பகிரங்கமாகக்கூறி சுமந்திரனின் மீள் பாராளுமன்ற பிரவேசத்துக்கான திட்டத்தை, ஆசையை தகர்த்து விட்டார்.

மாகாண சபை தேர்தல் நடத்துவதாக இருந்தால் தேர்தல் திருத்தம் முதலில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவேண்டும். முன்னாள் எம்.பி சுமந்திரனால் தனிநபர் பிரேரணைகூட கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் 50வீதம் தொகுதி மற்றும் விகிதாசார முறைக்கு தென்னிலங்கையிலும் கடும் எதிர்ப்பு வந்தது. நாங்களும் அதற்கு எதிர்ப்பு இவ்வாறான இழுபறியில் மாகாண சபை தேர்தல் உள்ளது. இவ்வாறானதொரு சூழ் நிலையில் மாகாண சபை தேர்தல் நடந்தால் முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதற்கு நன் தயாரில்லை.

கட்சி வழக்கு நிலுவையில் உள்ளது. கட்சியில் உள்ளவர்களே வழக்கினைத் தாக்கல் செய்திருக்கின்றனர். தாயினை நீதிமன்றத்தில் வைத்துக்கொண்டு தாயிடம் உணவு கேட்பது. பால் அருந்த போகின்றோம் என்று சொல்வது போலுள்ளது நாம் செய்வது இனவிடுதலைக்கான அரசியல். பதவிகளுக்கான அரசியல் அல்ல பதவிகளுக்கு அரசியல் செய்வது தவிர்க்கப்படவேண்டும். இவ்வாறான சூழல் இருக்கும் போது நான் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் எண்ணம் இல்லை என்று கூறி சுமந்திரனின் எம்.பி. பதவி கருத்துக்கு சுமந்திரனை வைத்தே சிறீதரன் பதிலடி கொடுத்து விட்டார்.

இதனால் ஏமாற்றமும் விசனமுமடைந்த சுமந்திரன் மீண்டும் ஒரு வியூகத்தை அமைத்து "மரணவீட்டில் அரசியல் செய்யும் இழிவானவர்கள்" என்ற பிரசாரப் போரை சிறீதரன் மீதும் அவரை ஆதரிப்போர் மீதும் தொடுத்துள்ளார். சுமந்திரன் தனது வியூகங்களுக்கு ஊடகங்களைப் பயன்படுத்துவதே வழமை. அதேபோன்றே தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரணவீட்டில் தனது அணியினருக்கு காட்டப்பட்ட "துரோகிகள்" என்ற எதிர்ப்பை வைத்துக்கொண்டு சிறீதரனுக்கு எதிரான அடுத்த வியூகத்தை அமைத்து அதனூடாக பிரசாரப்போரையும் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணல் மூலமே சுமந்திரன் தொடுத்தார்.

சுமந்திரன் அந்த நேர்காணலில் "மாவை சேனாதிராஜா சுகவீனமடைந்ததும் அவரை நான் வைத்தியசாலையில் பார்வையிட்டேன். பின்னர் அவரின் மரணச் செய்தி அறிந்ததும் நேரடியாக அவரின் வீட்டுக்கு சென்று அஞ்சலி செலுத்தினேன். அவரது குடும்பத்தினருடன் ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக உரையாடினேன். ஆனால் எனக்கு பின்னர் சென்றவர்கள் தவறாக நடத்தப்பட்டார்கள். மாவை சேனாதிராஜாவுடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்ட குலநாயகம் அங்கு முழுமையாகவே செல்ல முடியாத நிலைமை இருந்தது.

மாவை சேனாதிராஜாவின் இறுதி சடங்கில் மரணத்துக்கு காரணமானவர்கள் என்று நான் உள்ளிட்டவர்களின் புகைப்படங்களுடன் பதாகைகளைக் கட்டினார்கள் நாங்கள் அங்கு சென்றால் குழப்பங்களை ஏற்படுத்த குண்டர்களும் தயார் நிலையில் இருந்தார்கள். ஆகவே மறைந்த தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த சென்று அங்கு சலசலப்பு ஏற்பட்டால் அது மாவை சேனாதிராஜாவுக்கு அகௌரவத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விடும் என்பதனால் ஒதுங்கியிருந்தேன். அதுமட்டுமன்றி மரணச்சடங்கில் அரசியல் செய்யும் மிக மோசமான நிலைமை இருந்தது, இந்த நிலைமைக்கு வெளியில் இருப்பவர்களும் எமது கட்சியில் சிலரும் காரணமாக இருக்கின்றார்கள் என்பது மிக மோசமான விடயம்.

நான் உள்ளிட்டவர்களின் பங்கேற்பின்மையை பெரு வெற்றியாக கொண்டாடுபவர்கள் இன்னும் கட்சிக்குள் இருக்கின்றார்கள். மரணச்சடங்கையே அரசியலுக்கு பயன்படுத்துகின்ற இழிவான அணியொன்று கட்சிக்குள் இருந்தால் அந்த அணியுடன் எப்படி நான் உள்ளிட்டவர்கள் இணைந்து செல்ல முடியும்? எனவே இந்த வேறுபாடுகள்தான் தமிழரசுக்கட்சிக்குள் இரு அணிகளாக தெரிகின்றன. இந்த விடயம் தொடர்பாக நாம் ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரைவில் எடுப்போம் கட்சித்தலைவர் தற்போது பொலிஸ ில் முறைப்பாட்டை செய்துள்ளார். விசாரணைகள் நடைபெறுகின்றன விரைவில் இதன் சூத்திரதாரிகள் வெளிப்படுத்தப்படுவார்கள்" என்று கூறியிருந்தார்.

மரணச்சடங்கில் அரசியல் செய்யும் மிக மோசமான நிலைமை இருந்தது, இந்த நிலைமைக்கு வெளியில் இருப்பவர்களும் எமது கட்சியில் சிலரும் காரணமாக இருக்கின்றார்கள் என்பது மிக மோசமான விடயம். மரணச்சடங்கையே அரசியலுக்கு பயன்படுத்துகின்ற இழிவான அணியொன்று கட்சிக்குள் இருந்தால் அந்த அணியுடன் எப்படி நான் உள்ளிட்டவர்கள் இணைந்து செல்ல முடியும்? என்பது சுமந்திரனின் கேள்வி. அது நியாயமானதுதான். ஆனால் இதுதான் "கர்மா" என்பது சுமந்திரனுக்கு தெரியவில்லையா அல்லது தெரிந்தும் தெரியாதவர் போல் நடிக்கின்றாரா என்பதே கேள்வி.

மரணச்சடங்கையே அரசியலுக்கு பயன்படுத்துகின்ற இழிவான அரசியலை முதலில் தமிழரசுக்கட்சிக்குள் ஆரம்பித்தவர் சுமந்திரன். தமிழரசுக்கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் மரணமடைந்த நிலையில் சம்பந்தனின் மரண வீட்டை அரசியலாக்கி சம்பந்தனின் மரணவீட்டில் சிறீதரன் அணியினரை கிட்ட நெருங்கவிடாது, சாணக்கியன். சயந்தன் என்ற இரு விசுவாசிகளை வைத்துக்கொண்டு சம்பந்தனின் மரணத்தை, மரணவீட்டை, இறுதி ஊர்வலத்தை தனது இழிவான அரசியலுக்கு பயன்படுத்தியவர் சுமந்திரன்.

சம்பந்தனின் உயிர் பிரிந்தவுடனேயே சுமந்திரன் அணி சம்பந்தனின் இறுதிக்கிரியை தொடர்பான அனைத்து விடயங்களையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டதால் அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்பது தமிழரசுக்கட்சியினரிலேயே பெருமளவானோருக்கு தெரிந்திருக்கவில்லை. சம்பந்தனின் மரணச்சடங்கில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இன்னொரு அணியான சிறீதரனின் வகிபாகம் இருந்துவிடக்கூடாது என்பதில் தீவிர கவனம் எடுத்த சுமந்திரன் அணி சம்பந்தனின் உடல் அக்கினியுடன் சங்கமமாகும் வரை சம்பந்தனின் உடலுடன் சங்கமித்தே இருந்தனர். இதனால் இலங்கை தமிழரசுக்கட்சியின் அப்போதைய தலைவரான மாவை சேனாதிராஜா, சிறீதரன் முதல் தமிழரசுக்கட்சியின் உண்மையான விசுவாசிகள் வரை வெறும் பார்வையாளர்களாக வந்து சம்பந்தனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தவேண்டிய நிலைமையை இந்த அணி ஏற்படுத்தியிருந்தது.

சம்பந்தனின் பூதவுடல் கொழும்பு பொரளை மலர்ச் சாலையிலும் பின்னர் பாராளுமன்றத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிலையில் அவரது சொந்த ஊரான திருகோணமலைக்கு கொண்டு செல்ல முன்னர் கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் சிறீதரனால் சுமந்திரன் அணியிடம் விடுக்கப்பட்டு முதலில் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் சிறீதரனால் "சம்பந்தனின் உடல் கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்" என்ற செய்தி ஊடகங்களுக்கும் வழங்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் திடீரென சிறீதரனின் இந்த வேண்டுகோளை நிராகரித்த சுமந்திரன் அணி, சம்பந்தனின் உடல் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவரங்கத்தில் மட்டுமே அஞ்சலிக்காக வைக்கப்படும் என்ற அறிவிப்பை விடுத்தது. அவ்வாறானால் சம்பந்தனின் உடலை தரை வழியாக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அப்போது தமிழர் பகுதிகளில் மக்கள் அவருக்கு வழி நெடுகிலும் அஞ்சலி செலுத்தக்கூடியதாக இருக்கும் என்ற வேண்டுகோளை சிறீதரன் தரப்பு விடுத்தபோதும் அதனையும் நிராகரித்த சுமந்திரன் அணி சம்பந்தனின் உடலை விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு சென்று அஞ்சலிக்கு வைத்து விட்டு பின்னர் அங்கிருந்து விமானம் மூலமே திருகோணமலைக்கும் எடுத்துச் சென்றது.

இவ்வாறு சிறீதரன் அணியினரை சம்பந்தனின் இறுதிக்கிரியை காரியத்தில் நெருங்கவிடாது பார்த்துக் கொண்ட சுமந்திரனுக்குத்தான் தரும்போது தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரண வீட்டில் சிறீதரனுக்கு ஏற்பட்ட அதே நிலைமை ஏற்பட்டுள்ளது. மரணச்சடங்கையே அரசியலுக்கு பயன்படுத்துகின்ற இழிவான அணியொன்று கட்சிக்குள் இருந்தால் அந்த அணியுடன் எப்படி நான் உள்ளிட்டவர்கள் இணைந்து செல்ல முடியும்? எனக்கேள்வி எழுப்பும் சுமந்திரன் தான் அந்த இழிவான அரசியலின் ஆரம்ப கர்த்தா. ஆனால் அவரைப் பொறுத்தவரையில் "மற்றவர்களுக்கு வந்தால் அதுதக்காளி சட்னி தனக்கு வந்தால் அது இரத்தம்" என்ற சித்தாந்தமேயுள்ளது. ஆகவே மற்றயவர்களுக்கு ஒரு விரலை நீட்டி குற்றம்சாட்டும்போது ஏனைய நான்கு விரல்களும் தன்னை நோக்கியிருப்பதை சுமந்திரன் மறந்து விடக்கூடாது.

ஆக தமிழரசுக்கட்சியின் பெருந்தலைவர். சம்பந்தனின் மரண வீட்டில் இழிவான அரசியல் செய்த சுமந்திரனை அதே தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரண வீட்டில் "கர்மா" தாக்கியுள்ளது. எனவே மரணச்சடங்கையே அரசியலுக்கு பயன்படுத்துகின்ற இழிவான அணியொன்று கட்சிக்குள் இருக்கின்றது என சுமந்திரன் ஒப்பாரி வைக்க முடியாது. ஏனெனில் அந்த இழிவான அரசியலின் பிதாமகன் சுமந்திரன். "கர்மா" அல்லது "வினைப்பயன்" என்பது ஒருவரின் தற்போதைய மற்றும் முந்தைய ஜென்மத்தில் செய்த செயல்களின் கூட்டுத்தொகையாகும், இது எதிர்கால இருப்பில் அவர்களின் தலைவிதியை தீர்மானிக்கிறது. இதுதான் தற்போது சுமந்திரனுக்கும் நடந்து வருகின்றது.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# மன்னார் – முசலியில் இரு மீனவ சமூகங்களுக்கிடையில் மத ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு

இலங்கை செய்திகள்
Sri Lanka News
மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (26-03-2025)

இரு மீனவ சமூகங்களுக்கிடையில் மத ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் ஏற்பாடு செய்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு 25ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை முசலி பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள கொண்டச்சி பாடசாலையில் இடம் பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் பணியாளர்கள் இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

இதன் போது முசலி பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் இளம் மீனவர்களும் தமிழ் இளம் மீனவர்களும் குறித்த இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இரு மீனவ சமூகங்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமை, சகோதரத்துவத்தை மேம்படுத்தும் வகையிலும், அவர்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படும் வகையிலும் குறித்த இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பிரதேச சபையை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றுமாக இருந்தால் கனிய வளங்கள் பாதுகாக்கப்படும் என்கிறார் டானியல் வசந்தன்

- எஸ்.ஆர்.லெம்பேட் (26-03-2025)



மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட உள்ள கணிய மணல் அகழ்வை நிறுத்தி கணிய வளங்களை பாதுகாக்க மக்கள் மன்னார் பிரதேச சபை தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பை ஆதரித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

எதிர் வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் பிரதேச சபைக்கான வேட்புமனு 26ம் திகதி அன்றையதினம் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் ஒரு முக்கியமானதாக அமைந்துள்ளது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் டைட்டானியம் எனப்படுகின்ற கனிய மணல் அகழ்வு செய்வதற்கு பல்வேறு கம்பெனிகள் போட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றது.

இத்தருனத்தில் மன்னார் பிரதேச சபையை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றுமாக இருந்தால் கனிய வளங்கள் பாதுகாக்கப்படும்.

எனவே மன்னார் பிரதேச மக்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை வெற்றி பெறச் செய்து கனிய வளங்களை பாதுகாக்க உறுதுணையாக இருங்கள்.

எனவே மன்னார் பிரதேச பை தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வெற்றி பெற்று சபையை அமைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# மன்னார் மக்கள் தமது கடந்த கால அனுபவங்களை கருத்தில் கொண்டு வாக்களிப்பார்கள் என்கிறார் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

- எஸ்.ஆர்.லெம்பேட் (25-03-2025)

இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மக்கள் தமது கடந்த கால அனுபவங்களை கருத்தில் கொண்டு தமக்கு சேவையாற்ற கூடியவர்களை அடையாளம் கண்டு சரியானவர்களை தெரிவு செய்வார்கள் ஈ.பி.டி.பி.கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை 25ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமை மன்னார் தேர்தல் அலுவலகத்தில் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.அந்த வகையில் மன்னார் பிரதேச சபைக்கான கட்டுப் பணத்தை செலுத்த செவ்வாய்க்கிழமை (25) மன்னார் தேர்தல் அலுவலகத்திற்கு வருகை தந்தேன்.

இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மக்கள் தமது கடந்த கால அனுபவங்களை கருத்தில் கொண்டு,தமக்கு சேவையாற்ற கூடியவர்களை அடையாளம் கண்டு,சரியானவர்களை மக்கள் தெரிவு செய்வார்கள் என்று நான் நம்புகின்றேன்.

அந்த வகையில் கட்சியின் மாவட்ட முக்கியஸ்தர்களுடன் சென்று மன்னார் பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை செலுத்தி யுள்ளேன்.

இம்முறை மன்னார் மாவட்டத்தில் இரண்டு சபைகளிலே போட்டியிட உள்ளோம்.

எதிர்வரும் காலங்களில் கடந்த காலத்தை போல மன்னார் மாவட்டத்தில் அனைத்து சபைகளிலும் போட்டியிட்டு அனைத்து சபை களையும் கைப்பற்றுவோம்.

யாழ் மாவட்டத்தில் அனைத்து சபைகளுக்கும் வெற்றிகரமாக வேட்பு மனு தாக்கல் செய்துள்ளோம்.என அவர் மேலும் தெரிவித்தார்.






- எஸ்.ஆர்.லெம்பேட் (23-03-2025)

# தமிழ்நிதி அருணா செல்லத்துரை எழுதிய "இராவணனார் தெய்வீக மானிடர் லங்கா பாங்கு" வரலாறு நூல் அறிமுகம்

## லங்கா-நகரி, மா-தோட்டம், மண்ணாறு. மாளிகைத்திடல், விடத்தல்தீவு, மன்னார் ஆகிய இடங்கள் பற்றிய வரலாற்றுத் தேடல்.

இரவணனார் நூல் அறிமுக நிகழ்வு 22ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலக மருதம் மாநாட்டு மண்டபத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) - மா. ஸ்ரீஸ்கந்தகுமார் தலையில் இடம் பெற்றது.

இன் நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய தவைவர், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் சட்டத்தரனிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சிறப்புப் பிரதிகள் வழக்கபட்டதை தொடர்த்து நூல் அறிமுகம் உரையை மா. ஸ்ரீஸ்கந்தகுமார் அவர்கள் (மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) - மன்னார்) வழங்கினார்.





நூல் நயவுரை பண்டிதர் திருமதி. ஏ.சுஜானா அவர்கள் வழங்கினார். நூலாசிரியரால் நூல் பற்றிய விழக்கமும் கருத்துப் பரிமாற்றமும் இடம் பெற்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நான்கு இலங்கையர்கள் மீது பிரித்தானிய அரசாங்கத்தின் தடை நடவடிக்கையினை பிரித்தானிய தமிழர் பேரவை வரவேற்கிறது




இலங்கை உள்நாட்டுப் போரின் போது நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள் உட்பட கடுமையான மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான நான்கு நபர்கள் மீது சொத்து முடக்கம் மற்றும் பயண தடைகளை விதித்ததற்காக பிரித்தானிய தமிழர் பேரவை (BTF), பிரித்தானிய அரசாங்கத்தை வரவேற்று பாராட்டுகின்றது.

உலகளாவிய மனித உரிமைகள் தடை விதிமுறைகளின் கீழ் மாக்னிட்ஸ்கி பாணியிலான (Magnitsky style) தடையை அமல்படுத்தவும், (1) இலங்கை ஆயுதப் படைகளின் முன்னாள் தளபதி சவேந்திர சில்வா, (2) முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட, (3) இலங்கை முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் (4) துணை இராணுவக் குழுவின் முன்னாள் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் என்கிற கருணா அம்மான் (கருணா குழு) ஆகியோருக்கு எதிராகப் பயணத் தடை மற்றும் சொத்துக்களை முடக்குவதற்காக எடுக்கப்பட்ட இங்கிலாந்து அரசாங்கத்தின் முடிவினைப் பாராட்டுகிறோம்.

பிரித்தானியாவில் 2024 இல் நடந்து முடிந்த தேர்தலின் போது, தாங்கள் அளித்த வாக்குறுதிகளில் ஒரு பகுதியை நிறைவேற்றியதற்காக பிரதமர் ரைட் ஹானரபிள் சேர் கெய்ர் ஸ்டார்மர் (Rt Hon Sir Keir Starmer MP) மற்றும் வெளியுறவு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்கான செயலாளர் ரைட் ஹானரபிள் டேவிட் லாமி எம்பி (Rt Hon David Lammy MP) ஆகியோருக்கு நாங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பிரதமர் தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதியானது இந்த நேரத்தில் நினைவுகூரத் தக்கது.

அத்துடன் இலங்கையில் குற்றவாளிகளுக்கு எதிராக மாக்னிட்ஸ்கி சட்டத்தை பிரயோகித்தமைக்காக அமெரிக்கா மற்றும் கனடாவுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

அமெரிக்காவின் "மேக்னிட்ஸ்கி சட்டம்" போன்ற சட்டத்தைப் பயன்படுத்தி, பிரித்தானியா தமிழர் பேரவை, பிரித்தானியாவில் வசித்து வரும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மற்றும் உலகளாவிய ரீதியில் வாழும் தமிழ் மக்கள் அமைப்புகளின் பத்து வருட காலத்திற்கும் மேலாக இலங்கை அரசாங்கத்திற்கெதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சர்வதேச நீதி விசாரணைக்காக, தொடர்ச்சியான கோரிக்கைகளை ஐ.நாவில் முன்வைக்க எம்முடன் தொடர்ந்து பயணித்த பல அரசியல்வாதிகளுடன், குறிப்பாக முன்னாள் கன்சர்வேடிவ் பாராளுமன்ற உறுப்பினர் ரைட் ஹானரபிள் தெரசா வில்லியர்ஸ் (Rt Hon Theresa Villiers), ரைட் ஹானரபிள் சேர் ஸ்டீபன் டிம்ஸ் எம்.பி. (Rt Hon Sir Stephen Timms MP) ஆகியோர் குறிப்பிடப்படக் கூடியவர்கள். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளுக்கு எம்முடன் கலந்துகொண்ட வெஸ் ஸ்ட்ரீட்டிங் பாராளுமன்ற உறுப்பினர் (Wes Streeting) MP, ரைட் ஹானரபிள் சேர் எட் டேவி பாராளுமன்ற உறுப்பினர் (Rt Hon Sir Ed Davey) போன்றோர் இலங்கையில் அட்டூழியக் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உலகளாவிய நியாயாதிக்கக் கோட்பாட்டைப் (Universal Jurisdiction) பயன்படுத்துமாறு ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையாளர்கள் மீண்டும் மீண்டும் உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

2020 மார்ச்சில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வுக்கு பிரித்தானிய தமிழர் பேரவையுடன் விஜயம் செய்த தெரசா வில்லியர்ஸ், அப்போதைய கன்சர்வேட்டிவ் அரசாங்கம் இது தொடர்பாக ஒரு சட்டத்தை முன்வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக எங்களுக்கு உறுதியளித்தார். இதன் விளைவாக ஜூலை 2020 இல் உலகளாவிய மனித உரிமைகள் தடை விதிமுறைகள் (Global Human Rights Sanctions Regulations) உருவாக்கப்பட்டன. இந்த சட்டம் தற்போது நடைமுறையில் உள்ள நிலையில், சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையின் ஊடாக பொறுப்புக்கூறலுக்காக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நீதிக்காக போராடும் அதே வேளை, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனவழிப்பு போன்ற அட்டூழியக் குற்றங்கள் செய்தவர்களுக்கு எதிராக பிரித்தானியாவில் தடைகளை விதிப்பதற்கான நடவடிக்கைகளை BTF தீவிரமாக முன்னெடுத்து வருகிறது.

மார்ச் 2009இலிருந்து ஐ.நா.மனித உரிமை கழகத்தில் (UNHRC) BTF இன் தொடர்ச்சியான முயற்சிகள், அங்கு மேற்கூறிய அரசியல்வாதிகள் மற்றும் எம் சகோதர அமைப்புகளுடன் இணைந்து எடுத்த காத்திரமான நடவடிக்கைகளின் விளைவாக மார்ச் 2021 இல் HRC/RES/46/1 எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து அக்டோபர் 2022 இல் HRC/RES/51/1 என்ற மேலும் வலுவூட்டப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த இரண்டு தீர்மானங்களின் அடிப்படையில் சிறிலங்கா பொறுப்புக்கூறல் திட்டத்தை (OSLAP) நிறுவி செயல்பாடுகளை தொடங்கின.

OSLAP இற்கு வழங்கப்பட்ட ஆணை (Mandate), மனித உரிமை மீறல்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கான (1) எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கான சாத்தியமான உத்திகளை உருவாக்குவதற்கும், (2) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் தப்பியவர்களுக்காக வாதிடுவதற்கும், (3) தகுதி வாய்ந்த நியாயாதிக்கத்துடன் உறுப்பு நாடுகள் உட்பட தொடர்புடைய நீதித்துறை நடவடிக்கைகள் மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் (5) தகவல் மற்றும் ஆதாரங்களை சேகரித்தல், ஒருங்கிணைத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாதுகாத்தல் போன்றனவாகும். அத்துடன் இனவழிப்பு குற்றங்கள் தொடர்பான சாட்சியங்களையும் OSLAP இற்கு தொகுத்து அனுப்பி வைக்க முடியும்.

இதன் விளைவாக, ஆகஸ்ட் 2024 இல் வெளியிடப்பட்ட OHCHR இன் இடைக்கால அறிக்கை (HRC/57/19), இலங்கை ஆயுதப் படைகளால் இழைக்கப்பட்ட பல மனித உரிமை மீறல்களை OSLAP இன் சாட்சியங்களை அடிப்படையாக கொண்டு சுட்டிக் காட்டியது.

2024 செப்டெம்பர் மாதத்தில் (OSLAP) தனது வசமுள்ள முக்கியமான அடையாள வழக்குகளை (emblematic cases) உள்ளடக்கிய தனது அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக மேலும் ஒரு வருட கால நீட்டிப்பு வழங்கப்பட்டு, 2025 செப்டெம்பரில் நடைபெறவுள்ள 60வது மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை மீது கொண்டு வரவிருக்கும் புதிய தீர்மானம் இலங்கை அரசாலும் பாதுகாப்புப் படையினராலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களின் அளவையும் அதன் பாதிப்புகளையும் வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

OSLAP இற்கு வழங்கப்பட்ட ஆணைக்கு அமைய, ஐ.நா. உறுப்பு நாடுகள் தங்கள் நீதித்துறை பொறிமுறைகளில் சட்ட நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கான தகவல்களை வழங்க OSLAP தயாராக உள்ளது, ஒரு முக்கியமான சாதகமான அம்சமாகும்.

இவ்வாறாக முக்கியமான சர்வதேச தளங்களில் தமிழ் மக்கள் எடுத்த முக்கியமான நகர்வுகளின் தொடர்ச்சியாக ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான குற்றமிழைத்தவர்கள் மீது அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியாவில் கொண்டு வரப்பட்டுள்ள தடைகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை.

உலகளாவிய மனித உரிமைகள் விதிமுறைகள் 2020 இன் (Global Human Rights Sanctions Regulations) கீழ் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதில் இங்கிலாந்து அரசாங்கம் சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதை தொடர்ந்து மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் பல நாடுகளை, குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) உள்ள நாடுகள் அதனை பின்பற்ற ஊக்குவிக்கும்.

# மோட்டார் சைக்கிள் மோதியதில் வேலணையில் முதியவர் உயிரிழப்பு!

4ஆம் வட்டாரம், மண்கும்பான் பகுதியைச் சேர்ந்த ஏரம்பு தட்சணாமூர்த்தி (வயது 75) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 16ஆம் திகதி இவர் பூப்புனித நீராட்டு விழாவுக்கு செல்வதற்காக வீதியை கடந்துள்ளார். இதன்போது அதிவேகமாக வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவர்மீது மோதியதில் அவர் அவ்விடத்திலேயே மயக்கமடைந்துள்ளார்.

பின்னர் பின்னர் அவரை வேலணை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 25ம் திகதி புதன்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# யாழ்ப்பாணத்தில் கணவன் தாக்கியதால் நான்கு மாத குழந்தையின் தாய் உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் கணவன் தாக்கியதால் மனவிரக்தியடைந்த இளம் தாய் ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். இதன்போது கட்டுடை, அரசடி வீதி பகுதியைச் சேர்ந்த யோ.நாகராணி (வயது 20) என்ற, 4 மாத குழந்தையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 20ம் திகதி வியாழக்கிழமை அன்று குறித்த பெண்ணுக்கும் கணவருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கணவன் அவரை தாக்கியுள்ளார். இதனால் மனவிரக்தியடைந்த குறித்த பெண் அன்றிரவு தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

# பேராசிரியர் மு. இளங்கோவனுக்கு தமிழ்நாடு அரசின் நற்றமிழ்ப் பாவலர் விருது!



புதுச்சேரி, இலாசுபேட்டையில் காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ளது. இதில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றும் முனைவர் மு. இளங்கோவனுக்கு, தமிழ்நாடு அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் 2024 ஆம் ஆண்டுக்குரிய நற்றமிழ்ப் பாவலர் விருது வழங்கப்பட்டுள்ளது.

25.03.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தமிழ் அகராதியியல் நாள் விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் "நற்றமிழ்ப் பாவலர்" விருதினைப் பேராசிரியர் மு. இளங்கோவனுக்கு வழங்கினார். விருதுத்தொகை ஐம்பதாயிரம் ரூபாவும், தங்கப்பதக்கம், சான்றிதழ் ஆகியனவும் மு. இளங்கோவனுக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் வே. இராசாராமன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஔவை. ந. அருள், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர் க. பவானி ஆகிய அரசு அதிகாரிகளும் தமிழறிஞர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் மு. இளங்கோவன் இணைய ஆற்றுப்படை, மாணவராற்றுப்படை, அச்சக ஆற்றுப்படை, அரங்கேறும் சிலம்புகள், மணல்மேட்டு மழலைகள் உள்ளிட்ட மரபுக் கவிதை நூல்களை நல்ல தமிழில் எழுதியுள்ள முயற்சியைப் பாராட்டும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

எமது பேராசிரியப் பெருமகனுக்கு கனடா உதயன் ஆசிரிய பீடம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.




# கிழக்கில் உருவாகியுள்ளது “குற்றவாளிகள் கூட்டமைப்பா?”

***“உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மையமாக வைத்து “கிழக்கு தமிழர் கூட்டமைப்பு” என்ற பெயரில் கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த கூட்டமைப்பின் பங்காளித் தலைவர்களாகவுள்ளவர்களில் ஒருவரான பிள்ளையான் கொலைக்குற்றச்சாட்டுகளில் சிறைத்தண்டனை அனுபவித்தவர். அடுத்தவரான கருணா அம்மான் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் குற்றச்சாட்டில் அண்மையில் பிரிட்டன் அரசினால் தடை விதிக்கப்பட்டவர். அடுத்தவரான வியாழேந்திரன் இலஞ்சக் குற்றச்சாட்டில் தற்போது சிறையில் இருப்பவர். அத்துடன் “கிழக்குத்தமிழர் கூட்டமைப்பு” என்ற பெயரும் இன்னொருவரிடமிருந்து திருடப்பட்டது.”***

**- கே. பாலா ----**

**நா**ட்டிலுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 339 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் 8,300க்கு மேற்பட்ட ஆசனங்களுக்காக 80000க்கும்மேற்பட்ட வேட்பாளர்கள் பல்வேறு அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் களமிறங்குகின்றனர். இதனால் இலங்கையின் அரசியல் களம் சூடுபிடித்துள்ளதுடன் தீவிர தேர்தல் பிரசாரங்களும் சேறடிப்பு பிரசாரங்களும் ஆரம்பமாகி விட்டன.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இம்முறை பல வரலாற்றுப்பதிவுகளும் இடம்பெறவுள்ளன. அதாவது உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகளவான அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடும் தேர்தல், அதிகளவான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட தேர்தல், இளைஞர் - யுவதிகள் அதிகளவில் போட்டியிடும் தேர்தல் என்ற வரலாற்று பதிவுகளுடன் பல உள்ளூராட்சி சபைகளில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பல உள்ளூராட்சி சபைகளில் எந்தவொரு கட்சியும் சுயேச்சைக்குழுவும் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க முடியாத தேர்தல் என்ற பதிவையும் இத்தேர்தல் ஏற்படுத்தப் போகின்றது.

இதனால்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பல உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் கூட்டணி அமைப்பதில் இம்முறை அதிக ஆர்வம் காட்டியிருந்தன. இதில் சில கூட்டணிகள் வெற்றிகரமாக அமைக்கப்பட்டபோதிலும் பல கூட்டணிகளின் பேச்சுக்கள் தோல்வியடைந்து கூட்டணி முறிவுகளும் இடம்பெற்றுள்ளன. இதில் பிரதான சில தமிழ் தேசிய கட்சிகள் தேர்தல் முடிவடைந்த பின்னர் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க தனிப்பெரும்பான்மை கிடைக்காதுவிட்டால் அப்போது ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் இணைந்த ஆட்சியமைப்பது தொடர்பில் பேசலாம் என்ற திட்டத்துடனும் உள்ளன.

இவ்வாறாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற அமைக்கப்பட்ட கூட்டணிகளில் விசித்திரமானதும் வில்லங்கமானதும் விமர்சனத்துக்குள்ளானதும் குற்றவாளிகளின் கூட்டமைப்பாக கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள “கிழக்கு தமிழர் கூட்டமைப்பு” அமைந்துள்ளது. ஏன் இக்கூட்டமைப்பு அவ்வாறான தொரு விசித்திர கூட்டமைப்பாக அமைந்துள்ளது என்பதனைப் பார்ப்போம்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த “கிழக்கு தமிழர் கூட்டமைப்பு” என்ற கூட்டணியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, கருணா அம்மான் என அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி மற்றும் அமல் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகம் ஆகிய மூன்று கட்சிகள் உள்ளன.

இதில் முதல் இரு கட்சிகளின் தலைவர்களான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விடுதலைப்புலிகளின் தலைமைக்கும் தமிழ் மக்களுக்கும் துரோகம் செய்து விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் பேரினவாதிகளுக்கு காட்டிக்கொடுத்துவிட்டு வெளியேறி இன்றுவரை பேரினவாதிகளினதும் இராணுவத்தினதும் புலனாய்வுத்துறையினதும் கைக்கூலிகளாகவும் ஒட்டுக்குழுக்களாகவும் சேவை செய்பவர்கள். பேரினவாத அரசுகளில். கிழக்கு மாகாண முதலமைச்சர், இராஜாங்க, பிரதி அமைச்சர் பதவிகளை வகித்தவர்கள்.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவராக கருணா அம்மானும் உப தலைவராக பிள்ளையானும் இருந்த நிலையில் 2007 ஆம் ஆண்டு ஏப்ரலில் கட்சியில் இடம்பெற்ற உள்ளக மோதலை அடுத்து, கருணா அம்மான் கட்சியில் இருந்து வெளியேறியதை அடுத்து, பிள்ளையான் கட்சித் தலைவரானார். அடுத்தவரான சதாசிவம் வியாழேந்திரன். தமிழ் மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்) என்ற தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான இயக்கத்தின் உறுப்பினராகவிருந்து தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளியாகி பாராளுமன்ற உறுப்பினராகி தனது தலைமைக்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கும் தமிழ் மக்களுக்கும் துரோகம் செய்து காட்டிக்கொடுத்து விட்டு பேரினவாத அரசில் இராஜாங்க அமைச்சர் பதவி வகித்தவர்.

கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் பங்காளித் தலைவர்களாகவுள்ள பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், அடுத்தவரான சதாசிவம் வியாழேந்திரன் ஆகிய இந்த மூவரின் மீதும் தமது தலைமைகளைகாட்டிக் கொடுத்தல், தமிழ் மக்களுக்கு துரோகம் செய்தல் குற்றங்களை விடவும் படுகொலைகள் ஆட்கடத்தல்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், கப்பம் கோரல்கள், மணல் கடத்தல்கள், காணி பிடிப்புக்கள், இலஞ்சம் கோரல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இதில் பிள்ளையான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் ஆகியோரின் படுகொலைகள் தொடர்பாக 2015 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பிள்ளையான் சிறையில் இருந்தவாறே 2020 பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவானார் இதனையடுத்து 2020 நவம்பர் 24 அன்று பிணையில் விடுவிக்கப்பட்ட அவர் கோத்தபாய ராஜபக்ச அரசில் இராஜாங்க அமைச்சராக பதவியேற்றார்.

இந்நிலையில் பிள்ளையான் மீது உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் குற்றச்சாட்டுக்களும் உள்ளன. பிள்ளையானுடன் இணைந்து செயற்பட்ட ஆசாத் மௌலானா என்பவர் பகிரங்கமாகவே பல குற்றச்சாட்டுகளை பிள்ளையான் மீது சுமத்தியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பாக பிள்ளையான் வாக்குமூலங்களையும் அளித்துள்ளார். இத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நேர்மையாக நடைபெறுமாகவிருந்தால் பிள்ளையான் மீண்டும் சிறை செல்ல நேரிடும்.

அடுத்தவரான கருணா அம்மான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து 2004 இல் வெளியேறி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எனும் புதிய அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக தன்னை அறிவித்துக்கொண்டார். அரசின் கைக்கூலியானார். இதற்கிடையில் கருணா அணியிலிருந்து பிரிந்து சென்ற பிள்ளையான் அணியினர் மட்டக்களப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் அலுவலகங்களைக் கைப்பற்றியதை அடுத்து, 2007 ஆம் ஆண்டு அரசினால் போலிக்கடவுச் சீட்டு வழங்கப்பட்டு இரகசியமாக லண்டனுக்கு சென்ற கருணா அம்மான், போலி கடவுச் சீட்டு வைத்திருந்ததாக அங்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மீண்டும் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார்.

இந்நிலையில் அரசியலில் நுழைந்த அவர் 2008 அக்டோபர் 7 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் இலங்கை பாராளுமன்றத்தின் எம்.பி.யாக பதவியேற்றுக்கொண்டார். அதே ஆண்டு தேசிய நல்லிணக்க மறுசீரமைப்பு அமைச்சராகவும் பதவியேற்றுக் கொண்டார்.பின்னர். மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து உப தலைவராக பதவியேற்றுக் கொண்டார். இவர் 2010 பாராளுமன்றத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தேசியப் பட்டியல் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர் மக்கள் செல்வாக்கை இழந்த இவர் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்தபோதும் அரசியலில் ஒதுங்கியே இருந்தார். இவர்மீது பல்வேறு படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் கோரல்கள் உள்ளிட்ட குற்றச் சாட்டுகள் உள்ளன. இவ்வாறான நிலையில்தான் இலங்கையில் கடுமையான மனித உரிமை மீறல்களுக்குக் காரணமாக கருதப்பட்ட இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜகத் ஜெயசூரியா, ஆகியோருடன் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகிய கருணா அம்மானுக்கும் பிரிட்டன் அரசு அண்மையில் தடை விதித்தது.

அடுத்தவர் சதாசிவம் வியாழேந்திரன். தமிழ் மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) உறுப்பினரான இவர் 2015 பாராளுமன்றத் தேர்தலில் புளொட் கட்சியின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவானார் 2018 இலங்கை அரசியலமைப்பு நெருக்கடியின் போது, 2018 அக்டோபர் 26 இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அப்போது பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து அகற்றி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவை பிரதமராக அறிவித்தார் இதனை அடுத்து மஹிந்த ராஜபக்ச தனது பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் நிரூபிக்க வேண்டி ஏற்பட்டது. அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மஹிந்த ராஜபக்சவின் நியமனத்தினை எதிர்த்த நிலையில் வியாழேந்திரன் மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளித்து கட்சி தாவினார். இவருக்கு 2018 நவம்பர் 2 இல் ராஜபக்ஸவின் அரசில் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. 2018 நவம்பர் 14 இல் மஹிந்த ராஜபக்ஸ அரசிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதை அடுத்து இவர் பதவி இழந்தார்.


பின்னர் 2020 பாராளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார் இவருக்கு மஹிந்த அரசில் தபால் சேவைகள், வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இறுதியாக நடந்த தேர்தலில் போட்டியிட முனைந்தபோதும் அவரது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால் போட்டியிடமுடியாத நிலை ஏற்பட்டது.

இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளநிலையில் தற்போது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கடந்த வருடம் 15 இலட்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வியாழேந்திரனின் செயலாளர், அமைப்பாளர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் அதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டிலேயே கடந்த செவ்வாய்க்கிழமை வியாழேந்திரனை கொழும்பு புதுக்கடை பகுதியில் வைத்து இலஞ்ச உழல் ஆணைக்குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட வியாழேந்திரனை புதுக்கடை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

**(தொடர்ச்சி 19 பக்கம்)**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1139

## கதிஉகாமம் முத்துலிங்கசுவாமி கோயில்

### [சிவன்கோயில்] கதிஉகாமம்

கதிர்காமத்தில் நான்கு திசையும் இறைவனை எழுந்தருளப்பண்ணி வணங்கிவருகின்றனர். இந்தவகையிலே, முத்துலிங்கசுவாமி கோயில் (சிவன்கோயில்), கதிர்காமத்தின் மேற்குத் திசையிலே அமைந்துள்ளது. இக்கோயில், கதிர்வேற்பிள்ளை பொன்னையா கந்தையா வழித்தோன்றலில் வந்தவர்களால் பரிபாலனம் செய்யப்பட்டது. இவர்களின் பின், பாலா என அழைக்கப்பட்ட திரு. குமாரசிங்கம் அவர்களால், முத்துலிங்கசுவாமி கோயில் பரிபாலிக்கப்பட்டது. இவ்வாலயம் 1974 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது.

தினமும் அக்கினி வளர்க்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்திலே மூன்றுநேரப் பூசைகள் மிகச் சிறப்பாக இடம்பெறுவதோடு, மகாசிவராத்திரி விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. முத்துலிங்கசுவாமிகோயில் உட்பட கதிர்காமத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும், சனிக்கிழமையன்று காலைப்பூசை நடைபெறாது. பதிலாக, அனைத்துத் தெய்வங்களுக்கும் எண்ணெய் முழுக்குடன் கூடிய அபிஷேகம் இடம் பெறும். இவ்வாலயத்தின் கருவறையிலும் இறைவன் மறைபொருளாக விளங்குகின்றார். இங்கும் மௌனபூசை இடம்பெறுகின்றது. கதிர்காமம் சிவன் கோயிலைச்சுற்றி பரிவார மூர்த்திகள் காணப்படுகின்றனர்.

முத்துலிங்கசுவாமிகள் கோயிலின் முன்புறத்திலே, விநாயகப்பெருமான்

### [வரலாறும் மரபும்]

எழுந்தருளியுள்ளார். இவ்விநாயகர்பற்றி வழக்கிலே ஒரு வரலாறு கூறப்படுகின்றது. இவ்விநாயகப்பெருமான் மாணிக்கங்கையிலே தோற்றம் பெற்றதனைக்கண்ட பக்தர்கள், அதனை எடுத்துப் பூசித்துவந்தனர். இவ்விநாயகர் மாணிக்கக் கல்லாகக் காணப்பட்டமையால், அதனை சிலர் விற்க முயன்றபோது, விநாயகர் கருங்கல்லு நிறமாக மாறினாரென்றும் கதையொன்று வழக்கிலே நிலவுகின்றது. இவ்வாலயத்தினைச் சுற்றிவர பரிவார மூர்த்திகள் காணப்படுகின்றனர். இவ்வாலயத்தின் பின்புறத்திலே பிள்ளையாரும், நாகம்மாளும் எழுந்தருளியுள்ளனர்.

கதிர்காமத்திலுள்ள தெய்வானை அம்மன் ஆலயத்திலே கொடியேற்றம் நிகழும்பொழுது, அதேநேரத்தில் முத்துலிங்கசுவாமி கோயிலிலும் கொடியேற்றம் நிகழும். முத்துலிங்கசுவாமிகள் கோயிலின் கொடியானது, கதிர்காமத்திலுள்ள மடாதிபதிகளை நினைவுபடுத்து முகமாக, செம்மஞ்சள் நிறத்திலே அமைந்துள்ளது. இதே தினம் மாணிக்கப்பிள்ளையார் மற்றும் முருகன் கோயில்களில் பச்சைப்பந்தல்போடும் வைபவம் இடம்பெறும். இக்கோயிலும் ஞானியர் சமாதியடைந்த இடமாக விளங்குவதால், அருளொளி பெற்றுக் காணப்படுகின்றது இந்தியாவிலும், இலங்கையிலும் உலகமெங்கும் தற்காலத்தில் முழுமுதற்கடவுளாகிய சிவனுக்குரிய சிவவழிபாடு காணப்படுகின்றது.

ஈழத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட பஞ்சஈஸ்வரங்களோடு மேலும் பல சிவன் ஆலயங்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. இவ்வாறான சிவாலயங்களுள் ஒன்றாக, வடநாட்டிலிருந்து ஈழத்திற்கு வருகைதந்து சித்தராக வாழ்ந்த, முத்துலிங்க சுவாமிகளால் போற்றப்பட்ட, வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமத்திலே, முத்துலிங்கசுவாமி கோயில் என அழைக்கப்படும் சிவன்கோயில் காணப்படுகின்றது.

*" நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்*
*நமச்சிவாயவே நானறி வித்தையும்*
*நமச்சிவாயவே நாநவின்றேத்துமே*
*நமச்சிவாயவே நன்நெறி காட்டுமே. "*

***வளரும்...***

இலங்கை செய்திகள்
Sri Lanka News

**கனகராசா சரவணன்**

## இலஞ்சம் வாங்கியதற்கு உடந்தையாக இருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்வியாழேந்திரன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது




கடந்த வருடம் 15 இலச்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் செயலாளர் அமைப்பாளர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் அதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை எஸ்.வியாழேந்திரனை கெழும்பு புதுக்கடை பகுதியில் வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் கைது செய்துள்ளதாக பொலிஸ் எமது செய்தியாளர் தெரிவித்தார்.

கடந்த 2024ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி மண் அகழ்விற்கு அனுமதி பெற்றுதருவதாக வர்த்தகர் ஒருவரிடம் 15 இலச்சம் ரூபாவை இலஞ்சமாக முன்னாள் இராஜாங்க அமைச்சரின் செயலாளர் மற்றும் பிரதேச அமைப்பாளர் ஆகிய இருவரும் மட்டக்களப்பு கல்லடி கடற்கரைப்பகுதியில் வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சரிடம் விசாரணைகளை மேற்கொண்டுவந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் குறித்த சம்பவத்துக்கு உடந்தையாக அமைச்சர் இருந்துள்ளார் என கண்டறிந்தனர் இந்த நிலையில் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவந்த நிலையில் அமைச்சரின் செயலாளரின் வழக்கு விசாரணைக்காக செயலாளர் அமைப்பாளருடன் சம்பவதினமான 215ம் திகதி செவ்வாய்க்கிழமை புதுக்கடை நீதிமன்ற பகுதிக்கு முன்னாள் அமைச்சர் சென்றுள்ள நிலையில் அவரை அங்கு வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அமைச்சரை புதுக்கடை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை எதிர்வரும் ஏப்பிரல் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை கடந்த 2022ம் ஆண்டு யூன் 21ம் திகதி அவரது பிரத்தியோக செயலாளராக இருந்த சகோதரர் காணி ஒன்றிற்கு 15 இலச்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய நிலையில் மட்டக்களப்பு நகரிலுள்ள உணவகம் ஒன்றில் வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## மட்டக்களப்பு மாமாங்கத்தில் உயிரிழந்த நிலையில் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த ஆண் ஒருவர் சடலமாக மீட்பு



மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியில் வீடு ஒன்றில் இருந்து அவுஸ்ரேலியா நாட்டைச் சோர்ந்த ஆண் ஒருவர் 26ம் திகதி புதன்கிழமை சடலமாக மீட்க்கப்பட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த 71 வயதுடைய செல்லத்துரை கெங்காதரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் கடந்த ஒருமாதத்திற்கு முன்னர் அவுஸ்ரேலியாவில் இருந்து மட்டக்களப்பு மாமாங்கம் 6ம் குறுக்கு வீதியிலுள்ள வீடு ஒன்றில் வந்து தங்கியுள்ள நிலையில் படுக்கையறையில் இரவு நித்திரைக்கு சென்றவர் அதிகாலையில் நித்திரையில் இருந்து எழும்பாத நிலையில் அவரை எழுப்ப முற்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளதை கண்டு பொலிசாருக்கு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த சடலத்தை நீதிமன்ற அனுமதியை பெற்று பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்புபோதனா வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைத்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

**பு. கஜிந்தன்**

## விபத்தில் சிக்கிய முழங்காவில் பகுதியைச் சேர்ந்த குடும்பப்பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழப்பு!

மகளை கல்வி நிலையத்திற்கு அழைத்துச் சென்ற குடும்பப்பெண் ஒருவர் மகேந்திரா ரக வாகனம் மோதியதில் 26ம் திகதி புதன்கிழமை இரவு உயிரிழந்துள்ளார். 31ஆம் கட்டை, முழங்காவில் பகுதியைச் சேர்ந்த கமல் நகுலமலர் (வயது 44) என்ற 3 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில், 25ம் திகதி செவ்வாய்க்கிழமை இவர் மகளை கல்வி நிலையத்திற்கு, நடந்து கூட்டிச் சென்றுகொண்டிருந்தார். இதன்போது பின்னால் வந்த மகேந்திரா வாகனம் இவர் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் மயக்கமடைந்தார். பின்னர் சாரதி முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

படுகாயமடைந்த பெண், முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்ன யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## கிளிநொச்சி இயக்கச்சி பகுதியில் இரவோடு இரவாக பெருமளவான பனைகள் அழிப்பு!

கிளிநொச்சி இயக்கச்சி பகுதியில் இரவோடு இரவாக பெருமளவான பனைகள் அழிக்கப்பட்டதாகவும் இந்த சட்டவிரோத செயலுக்கு பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகளின் "துணை" இருந்திருக்கும் என்று எதிர்பார்ப்பதாக அந்த பகுதியில் வாழ்ந்து வரும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி, இயக்கச்சிப் பகுதியில் கண்ணகி அம்மன் கோயில் சுற்றாடலில் இரவோடு இரவாக நூற்றுக்கணக்கான பனை மரங்கள் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளன.







சட்டவிரோதமாக காணி ஒன்றை தமதாக்கி கொள்வதற்காக சில விசமிகள் பனை மரங்களை அழித்தொழிப்பதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நூற்றுக்கணக்கான பனைகள் சில நாட்களில் அழிக்கப்பட்டு குறித்த இடம் பாலைவனமாகி வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது சம்மந்தமாக பனை அபிவிருத்தி அதிகார சபை உட்பட்ட அதிகார மட்டங்களுக்கு முறைப்பாடு செய்தும் இதுவரை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாதது மிகுந்த வேதனையளிப்பதாக ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த பனை தறிப்பு சம்பவத்திற்கு பின்னால் தற்போதை பனை அபிவிருத்திச் சபைத் தலைவரான ஊழல் பேர்வழி காரணமாக இருக்கலாம் எனவும் இயக்கச்சி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(17 பக்கத் தொடர்ச்சி)

# கிழக்கில் உருவாகியுள்ளது "குற்றவாளிகள் கூட்டமைப்பா?"

அதுமட்டுமன்றி கடந்த 2022ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் திகதி வியாழேந்திரனின் பிரத்தியேக செயலாளராக இருந்த அவரது சகோதரர் காணி ஒன்றிற்கு 15 இலட்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய நிலையில் மட்டக்களப்பு நகரிலுள்ள உணவகம் ஒன்றில் வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டிருந்தார். அத்துடன் வியாழேந்திரன் இராஜாங்க அமைச்சராக இருந்த போது மட்டக்களப்பு மன்றேசா வீதியில் உள்ள அவரின் வீட்டுக்கு முன்பாக 2021-06-21 ஆம் திகதியன்று ஊறணியை சேர்ந்த ம.பாலசுந்தரம் என்ற இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திலும் இவர் குற்றச்சாட்டுக்குள்ளானார்.

ஆக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மையமாக வைத்து "கிழக்கு தமிழர் கூட்டமைப்பு" என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த கூட்டமைப்பின் பங்காளித் தலைவர்களாகவுள்ளவர்களில் ஒருவரான பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க சிவநேசதுரை சந்திரகாந்தன், கருணா அம்மான் என அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், அமல் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகிய மூவரும் குற்றவாளிகளாகவே உள்ளனர். பிள்ளையான் ஏற்கனவே சிறை வாசம் அனுபவித்தவர். எப்போது வேண்டுமானாலும் மீண்டும் சிறை செல்லவேண்டிய நிலையில் இருப்பவர். அடுத்தவரான கருணா அம்மான் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களினால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரிட்டன் அரசினால் தடைவிதிக்கப்பட்டவர். அடுத்தவரான வியாழேந்திரன் இலஞ்சக் குற்றச்சாட்டில் தற்போது சிறையில் இருப்பவர். ஆகையால் இந்த "கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு" குற்றவாளிகளின் கூட்டமைப்பாகவே காணப்படுகின்றது.

அதுமட்டுமல்ல "கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு" எனும் பெயரை முறையற்ற விதத்தில் தமது தேர்தல் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தியுள்ளனர். இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு மேற்படி கூட்டுக்கு எமது அனுமதியோ அல்லது சம்மதமோ இல்லாமல் "கிழக்குத் தமி ழர் கூட்டமைப்பு" எனும் பெயரைப் பயன்படுத்தியுள்ளதைக் கடுமையாக ஆட்சேபிக்கின்றோம் என கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் உண்மையான தலைவர், தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியி ட்டுள்ளார்.

கடந்த 15.03.2025 அன்று முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான சிவனேதுரை சந்திரகாந்தன் மற்றும் வியாழேந்திரன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் தமிழர் முற்போக்குக் கழகமும் இணைந்து "கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு" என்ற பெயரில் ஒரு கூட்டணியை அமைத்துள்ளனர். ஆனால் 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட "கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின்" அரசியல் பிரிவாக "கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு" எனும் பெயரிலான அரசியல் கட்சியொன்று தம்பியப்பா கோபாலகிரு'ணன் ஆகிய எனது தலைமையில் 2018 இல் உருவாகி அதற்குத் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான கடிதத் தொடர்பாடல்கள் 2019 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொ ள்ளப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டுத் தேர்தல் காலத்தில் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு சார்பில் பத்திரிகைச் செய்திகளும் பத்திரிகை அறிக்கைகளும் தேர்தல் பிரசாரத் துண்டுப் பிரசுரங்களும் கூட வெளியாகியிருந்தன. இந்த விடயங்களெல்லாம் பகிரங்கமாகப் பொதுவெளியில் அறியப்பட்டவையாகவிருந்த போதிலும் கூட மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாகக் கூறப்படும் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளரும் தமிழர் முற்போக்குக் கழகத்தின் செயலாளரும் "கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு" எனும் பெயரை முறையற்ற விதத்தில் தமது தேர்தல் அரசியல் தேவைகளுக்காக எடுத்தாண்டுள்ளனர். மேலும் இக்கூட்டுக்கும் எனது தலைமையில் 2018 இல் உருவான "கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு"க்கும் எந்தச் சம்பந்தமுமில்லையெ ன்பதை பொது மக்களுக்கும் ஊடகங்களுக்கும் சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் அறியத் தருகின்றேன் என அதில் தெரிவித்துள்ளார்.

ஆக குற்றவாளிகள் கூட்டமைத்துள்ள "கிழக்கு தமிழர் கூட்டமைப்பு"ம் திருடப்பட்ட ஒரு கூட்டமைப்பாகவே உள்ளது. எனவே விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரசாரங்களையும் பிரதேசவாதத்தினையும் முன்னிலைப்படுத்தும் இந்தக் குற்றவாளிகளின் கூட்டமைப்பு தொடர்பில் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் மிகவும் கவனமாகவும் தமிழ் தேசிய உணர்வோடும் சிந்திக்க வேண்டியது அவசியம்.

# கண்ணன் வருவான்

திருப்பாற் கடலில் தூக்கங் கொண்டாயே!
திருமகள் துணையில் அமைதி கண்டாய்
இரணியன் அகந்தை எரித்தவன் நீயே!
எழுவாய் புவியில் அரவின் மீதே!
அண்ணலின் ஆருயிர் அழகு ராதையே!
ஆண்டாள் அவனுக்கு எந்நாளும் சேவையே!
கண்ணா உன்னால் காலங்கள் இயங்குதாம்
கீதை எமக்கு உனது வரமே!

பரந்தாமன் இசைக்கும் புல்லாங்குழல் கையில்
பசுமாடு துணையாய்க் கேசவன் அருகில்
திருப்பதி வேங்கடனாய்த் திருநாமம் கொண்டவா
திருவருளால் திறல்பெற்று தரணியை அளந்தவா
பாரதத்தின் தளபதி பார்த்த சாரதியே!
பார்த்தனைப் பாதுகாத்துத் தந்தவன் நீயே!
பாரதப்போர் முடிக்கப் பணிலம் எடுத்தாயே!
பாஞ்சாலி புகழ்காக்க உன்கை கொடுத்தாயே!

கோபியர் சேலையைக் கவர்ந்த கள்வன்
கோகுலக் கண்ணன் கோபால மன்னன்
கோபிகை நடுவே கண்ணனின் நாதம்
குருவாய் ஊரினில் குழந்தைகள் கீதம்
கோசலைக் குமரா கொஞ்சும் மணிராமா
காஞ்சி நகரின் காவலனே வரதராஜா
பாசனம்மேல் பாற்கடலில் பள்ளி கொள்பவனே!
பரமனே பள்ளி எழுந்து அருள்வாயே!

கண்ணனை நினைத்தால் கருமங்கள் பலிக்கும்
காலம் தோறும் நினைத்தது நடக்கும்
கண்களைப் போலெமைக் காவல் புரியும்
காவலனே காணிக்கை உனக்கு மாதவனே!
குருவாயூர் தன்னில் குடியேறி உள்ளவன்
கொடியோடு மதுராவை அரசு செய்பவன்
திருமலை உறையும் திருமால் ஏந்தலே!
தினமுனை சேவிக்க வரமெனக் கருள்வாயே!.

அண்ணல் – – – பெருமையிற் சிறந்தவன்
திறல் – – – – வலிமை
பாசனம் – – – மரக்கலம் பணிலம் – – – சங்கு,
கோபிகை – – – இடைப்பெண்

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# "நிலக்கிளி" புகழ் பாலமனோகரன் அவர்களின் இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா கனடா – ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ளது

50 ஆண்டுகளுக்கு மேலாக நாவல் மற்றும் சிறுகதை இலக்கிய வடிவங்களைப் படைக்கும் ஒருவராக பயணித்து வரும் எழுத்தாளர் "நிலக்கிளி" புகழ் பாலமனோகரன் அவர்களின் இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா கனடா-ஸ்காபுறோ நகரில் நடைபெற ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது.

19-04-2025 அன்று சனிக்கிழமையன்று நடைபெறவுள்ள இந்த விழாவில் கலந்து கொண்டு ஓயாது எழுதும் அன்னாரது கரங்களைப் பற்றி எமது அன்பையும் ஆதரவையும் வழங்குவோமாக!



# இவ்வார ராசிபலன்

**28-03-2025 வெள்ளி தொடக்கம் 03-04-2025 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். வம்பு தும்புகள் ஒழியும். பூர்வீக சொத்து சேரும். உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். கனவு தொல்லை உண்டு. தேவைகள் பூர்த்தியாகும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத்தேடி வரும். இனிய தகவல் வந்து சேரும். புதியத்தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உடல் மனநிம்மதி தரும். பாராட்டுப் பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. செல்வாக்கு உயரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். புதிய முதலீடு தவிர்க்கவும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். புதிய நட்பை தவிர்க்கவும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். அந்நிய தேசப்பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,7,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,L




**ரிஷபம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். செய்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். சுபகாரியம் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். புத்தி சாதுர்யம் பெருகும். தந்தை உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளால் தாமதம் ஏற்படும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். இல்லத்தில் அமைதி கூடும். நீண்ட நாள் நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். சுபகாரியம் கைகூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பொது வாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமலல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**மிதுனம்:** மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. காதலர்கள் தம்பதியாவார்கள். கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். இடமாற்றம் நன்மை தரும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் தரும். தன வரவில் தடங்கல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். உலோகத் தொழில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சுப்ரமணியர், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**கடகம்:** பிள்ளைகளால் சொத்து சேரக்கூடிய வாரம். தாராளமான தனவரவு உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். சிறப்புக்கள் சேரும். பொறுப்புக்கள் கூடும். குடும்ப அன்யோன்யம் கூடும். வாய்ப்புகள் தேடி வரும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மாணவர் திறமை பளிச்சிடும். சிறிய இடையூறு ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சுய பலம் கூடும். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். தங்க நகைகள் சேரும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். புகழ்ச்சி அதிகரிக்கும். வெளியூர் பயணம் ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். ஆரோக்கியம் சீராகும். குடும்ப மேன்மை தரும். எந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வாகன அபிவிருத்தி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,2,7,9
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,K




**சிம்மம்:** நம்பிக்கைக்குரியவர்களை சந்திக்கும் வாரம். வழக்குகள் வெற்றி தரும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். விடாமுயற்சி அவசியம். போட்டிகள் மறையும். நல்லோர்களின் நட்பு கிட்டும். நிதி நிலைமை சீராகும். வழிபாடு மாற்றம் தரும். முயற்சிகள் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கைகூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சியில் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். திடீர் பயணம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,F




**கன்னி:** இக்கட்டான சூழ்நிலைகள் அகலும் வாரம். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். அணிகலன் சேரும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். புதிய எண்ணம் நிறைவேறும். நண்பர்களால் நன்மையுண்டு. வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். கல்வியில் கவனம் தேவை. காதல் கசக்கும். வழக்குகள் சாதகமாகும். தொழில் மேன்மை உண்டு. விவசாயம் பலன் அளிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத்தடை ஏற்படும். சோம்பல் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாதிப்புகள் அகலும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். உடல்நலம் கவனம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 3,7,5,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H




**துலாம்:** பெருமைகள் சேரும் வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய கடன் வசூலாகும். பயணம் அனுகூலம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் கவனம் தேவை. கலைத்துறையில் திருப்பம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். போட்டிகள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். தகுதிகள் உயரும். புதிய எண்ணங்கள் உருவாகும். கவலைகள் ஒழியும். கடன் பிரச்சனைகள் அகலும். சுபச்செலவு அதிகரிக்கும். அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். பொறுப்புக்களால் சிறப்பு சேர்க்கும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். மறைமுக எதிர்ப்பு விலகும். பணிவான பேச்சுகள் தேவை. சச்சரவுகள் அகலும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 5,3,7,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். நன்மைகள் பெருகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பொருளாதாரம் உயரும். சிந்தனைகள் மேலோங்கும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. தொலைபேசி தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பழைய பாக்கி வசூலாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பாராட்டுக்கள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். ஆடை, அணிகலன் சேரும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பெருமைகள் சேரும். திட்டமிட்ட செயல் தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். பணப்பற்றாக்குறை நீங்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. எள் தானம் ஏற்றம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C

(தொடர்ச்சி 22 பக்கம்)

# உக்ரைனின் மீதான ரஸ்யாவின் யுத்தம் முடிவுக்கு வந்தாலும் அந்த நாடு எதிர்நோக்கவுள்ள நிதிசார்ந்த சிக்கல்கள் மற்றும் பின்னடைவுகள் தொடருமா?

உலக செய்திகள்
World News



உக்ரைன் தேசமானது நன்கு வளர்ச்சியடைந்த ஒன்றாக விளங்கியது. உற்பத்தியில் மாத்திரமல்ல உலகின் பல நாடுகளிற்கு தேவையான வைத்தியர்களையும் விஞ்ஞானிகளையும் உருவாக்கின்கொண்டிருந்த ஒரு “மூளைகள்” நிறைந்த ஒரு அரசியல் பொக்கிசம். அந்த தேசத்தின் மீதான தொடரும் ரஷ்யத் தாக்குதலை எதிர்கொள்வதில் மிகப்பெரிய சவால்களை உக்ரேன் சந்திக்கிறது. போர்க்களத்தில் மட்டுமின்றி, அதன் நிதிசார்ந்த நெருக்கடி பெரிதான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. 2025-ஆம் ஆண்டுக்கான உக்ரைன் அரசாங்கத்தின் பொருளாதார பற்றாக்குறை $37.2 பில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, தனது இராணுவத்தை தற்போது விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவை உக்ரைனுக்கு தோன்றியுள்ளது. எனவே ராணுவத்தை பராமரிக்க தேவையான நிதி கேள்விக்குறியாக உள்ளது. இதனால் ஏனைய துறைகளுக்கு ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை இராணுவத்துறையையும் பாதிக்கின்றது.

இன்னொரு பக்கத்தில் உக்ரைன் தேசத்தின் ஒட்டுமொத்த வருமானத்தின் 50 வீதத்திற்கு மேல் தரை தட்டியுள்ளதை அந்த தேசத்தின் நிதித்துறை அறிவித்துள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வொலோதிமிர் செலென்ஸ்கி, ஐரோப்பிய ஒன்றியத்திடம் (EU) போர்க்கடமைகளுக்கான நிதியுதவியை வழங்குமாறு கேட்டுக்கொண்டு, உதவி கிடைக்காவிட்டால் உக்ரைனின் பாதுகாப்பு தகர்ந்து விடும் என எச்சரித்துள்ளார். ஆனால், €40 பில்லியன் மதிப்பிலான ஐரோப்பிய நிதியுதவி இன்னும் வழங்கப்படவில்லை, ஏனெனில் பிரான்ஸ், இத்தாலி, மற்றும் ஹங்கேரி போன்ற நாடுகள் தயக்கத்துடன் இருக்கின்றன.

இதேவேளை, உள்நாட்டிலேயே, உக்ரைன் நாடாளுமன்றம் ராணுவத்திற்கு பதிலாக அமைச்சக அதிகாரிகளின் சம்பளங்களை முன்னுரிமை அளித்துள்ளது, பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். இந்நிலையில், அமெரிக்கா உக்ரைனுக்கு ஆதரவை தொடர்ந்து வழங்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது, ஏனெனில் டொனால்டு டிரம்ப் மற்றும் விளாதிமிர் புதின் இடையே நடந்த (ceasefire) போர் நிறுத்தம் பேச்சுவார்த்தைகள் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

போரின் தொடக்கத்தில் இருந்தபோதே, உக்ரைன் அதன் ராணுவத்தை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இதனால், ராணுவ வீரர்களுக்கான சம்பளம், ஆயுதங்கள் மற்றும் போர் செயல்பாடுகளுக்கான நிதிச் செலவுகள் பெருகியுள்ளன. மேலும் மேற்கத்திய நாடுகள் நிதியுதவியில் சிக்கல் ஏற்படுத்தியதால், உக்ரைன் ஒரு ஆழ்ந்த நிதிசார்ந்த நெருக்கடியில் சிக்கியுள்ளது.

இந்த நெருக்கடியின் இடையிலும், உக்ரைன் நாடாளுமன்றம் ராணுவத்திற்கு நிதி ஒதுக்காமல், அமைச்சர்களின் சம்பளங்களை முன்னுரிமை அளித்திருப்பது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால், உள்நாட்டில் அரசாங்கத்துக்கு எதிராக கடும் எதிர்ப்பு உருவாகியுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலைக் கட்டுப்படுத்துவது, ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்பிற்கே மிக முக்கியமானது என ஜனாதிபதி செலென்ஸ்கி வலியுறுத்துகிறார். Time Magazine-இல் சமீபத்தில் பிரசுரமான ஒரு பேட்டியில், உக்ரைனின் எதிர்காலம் மேற்கத்திய நாடுகளின் உதவியினைச் சார்ந்தே உள்ளது என்று அவர் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியம் €40 பில்லியன் மதிப்பிலான உதவித் தொகையை வழங்க முன்வந்துள்ளது, ஆனால் பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஹங்கேரி இதை ஒப்புக்கொள்ள தயங்குகின்றன. குறிப்பாக, ஹங்கேரியின் பிரதமர் விக்டர் ஓர்பான், ரஷ்யாவுடனான உறவுகளை அதிகப்படுத்த விரும்புவதால், உக்ரைனுக்கு எதிராக நிலைப்பாடு எடுத்து வருகின்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவி தாமதமாகவோ, குறைவாகவோ வழங்கப்பட்டால், உக்ரைன் மிகப்பெரிய ராணுவ தோல்வியை சந்திக்க நேரிடும். இதன் விளைவாக, ரஷ்யா மேலும் பல பகுதிகளை கைப்பற்றும் வாய்ப்பு அதிகரிக்கும்.

உக்ரைனுக்கு மிகப்பெரிய ஆதரவாளராக இருந்த அமெரிக்காவின் நிலைமை தெளிவற்றதாக உள்ளது. ஜோ பைடன் நிர்வாகம் உக்ரைனுக்கு தொடர்ந்து உதவி செய்தாலும், டொனால்டு டிரம்ப் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அமெரிக்கா உக்ரைனை ஆதரிப்பதா அல்லது ஒரு சமாதான பேச்சுவார்த்தைக்கு செல்லுமா என்பது சந்தேகமாக உள்ளது.

டிரம்ப் மற்றும் புதின் இடையே நடந்த போர் நிறுத்தம் (ceasefire) பேச்சுவார்த்தைகள், உக்ரைனை ஒரு சமரசத்துக்கு கட்டாயப்படுத்தும் வாய்ப்பை உருவாக்கும். இதனால், உக்ரைன் தன்னுடைய நிலப்பரப்பை முழுமையாகப் பாதுகாப்பதில் சிக்கல்களை சந்திக்க நேரிடும்.

அமெரிக்காவின் நடுவராக செயல்படும் முயற்சியால், ரஷ்யா மற்றும் உக்ரைன் கருங்கடலில் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்திற்காகவும் ஆற்றல் உள்கட்டமைப்பின்மீது தாக்குதலை நிறுத்துவதற்காகவும் தனிப்பட்ட ஒப்பந்தங்களில் உடன்பட்டுள்ளன. இது, 30 நாட்கள் காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஓர் இடைக்கால யுத்தநிறைவு ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது.

அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தை அமைதிக்கான ஒரு முக்கியமான முன்னேற்றமாக கருதினாலும், ரஷ்யா தனது பங்கேற்பை சில கடுமையான நிபந்தனைகளுடன் இணைத்துள்ளது. குறிப்பாக, அதன் வேளாண்மை மற்றும் நிதிச் சந்தைகளின் மீதான தடைகளை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது.

உக்ரைன் அதனை கவனமாக அணுகி, ரஷ்யாவின் உண்மையான நோக்கம் சந்தேகத்திற்குரியது என்று தெரிவிக்கிறது. அதன் அதிபர் ஜெலென்ஸ்கி, ரஷ்யாவின் திடீர் நிலைப்பாட்டில் சந்தேகம் எழுப்பியுள்ளதுடன், மாஸ்கோ இயல்பாக ஒரு போர்நிறைவு செய்ய விரும்புவதாக இல்லை என்றும் தெரிவிக்கிறார்.

உக்ரைன் தனது நிதிசார்ந்த பிரச்சினைகளால் திணறிக்கொண்டிருக்க, ரஷ்யா தனது இராணுவத்தையும், அரசியல் உள்நாட்டுப் பணிகளையும் பயன்படுத்தி மேம்பட்டு வருகிறது.



- ரஷ்யா மேலும் பல பகுதிகளை கைப்பற்றுவதற்கான ராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.
- மேற்கத்திய நாடுகளில் ஊடகப் பிரச்சாரங்களை அதிகரித்து, உக்ரைனுக்கு ஆதரவாக இருக்கும் ஐரோப்பிய ஒற்றுமையை பிரிக்க முயல்கிறது.
- உக்ரைனுக்கான மேற்கத்திய உதவியை நிறுத்த வேண்டும் என்பதற்கான ரஷ்யா - சீனா கூட்டணியின் அழுத்தம் அதிகரித்துள்ளது.

உக்ரைன் இப்போது நேரத்துடனான ஒரு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அதை ஒரு தற்காப்பு யுத்தம் என்றே கூறவேண்டும். நிதி, ஆயுதங்கள், மற்றும் கூட்டாளிகள் இல்லாத நிலையில், உக்ரைன் போர்க்களத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க முடிந்தால் மட்டுமே அதன் நிலப்பரப்பை பாதுகாக்க முடியும்.

ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா தங்களுடைய முடிவுகளை விரைவாக எடுக்காவிட்டால், உக்ரைன் மிகப்பெரிய பின்னடைவை சந்திக்க நேரிடலாம். இதன் விளைவாக, முழு ஐரோப்பியாவின் நிலைப்பாடு சிக்கலில் மாட்டிக்கொள்ளும்.

அத்துடன், அமெரிக்கா சில பொருளாதாரத் தடைகளைத் தளர்த்த முன்வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக, ரஷ்ய வங்கிகளுக்கு SWIFT கணினி பரிமாற்ற முறையில் அணுகல் வழங்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகள் இதை ஆபத்தாகக் கருதி, ரஷ்யாவின் நிலைப்பாட்டை மதிப்பீடு செய்யும் முன் முனகல் செய்ய வேண்டாம் என எச்சரிக்கின்றன.

இச்செய்தி உலகளவில் முக்கியத்துவம் பெறும் நிலையில், யுத்தநிறைவு அமல்படுத்தப்படுமா அல்லது மேலும் கடுமையாகுமா என்பது உலக நாடுகள் கவனிக்கும் விஷயமாக உள்ளது.

ரஷ்யா இதனை தனது பங்கிற்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படுமா? உக்ரைன் இப்போது அதன் நிலைப்பாட்டை மாற்றுமா? மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவின் கோரிக்கைகளை ஏற்குமா?

இதனைப் பொறுத்தே, ஐரோப்பாவின் எதிர்கால அமைதியும், மொத்தமாக இந்தப் போரின் முடிவும் தீர்மானிக்கப்படும்.

உக்ரைனின் தற்காப்பு யுத்தமானது இப்போது ரஷ்யா மட்டும் எதிர்க்கின்ற ஒரு போராக இல்லை, மேற்கத்திய நாடுகளின் முடிவெடுக்கும் தாமதமும், அரசியல் குழப்பங்களும் உக்ரைனின் எதிர்காலத்தைக் குறித்த கேள்விகளை எழுப்புகிறன.

உக்ரைன் ஒரு சுயாட்சிக் கொண்ட நாடாக தொடருமா? அல்லது ஒரு பெரிய அரசியல் சமரசத்தின் ஆளாகி விடுமா? இதற்கான பதில் இன்னும் எவருக்குமே கிடைக்கவில்லை!

ராம்சங்கர் சிவநாதன்
647 891 7725




## Personal Prayer To The Holy Spirit

Our Mother of Perpetual Help

Holy Spirit Thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted.

R.R





## இவ்வார ராசிபலன்

*(20 பக்கத் தொடர்ச்சி)*




**தனுசு:** வறுமைகள் விலகும் வாரம். விவசாயிகள் பயன்பெறும். தெளிவான முடிவுகள் உதயமாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நண்பர்கள் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். கௌரவத்தில் கவனம் தேவை. புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். கலக்கமான மனநிலை காணப்படும். பிரார்த்தனையால் பலன் உண்டு. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். அதிகாரம் உயரும். அணிமணிகள் சேரும். வாகன யோகம் உண்டு. கட்டிட தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். தேச பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். பொருளாதாரம் மேம்படும். திருமண தீபம் சுடர்விடும். கடன் பாக்கிகள் வசூலாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. உழைப்பில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனநெருக்கடிகள் தீரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். உடல்நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மகரம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். திடீர் பயணம் ஏற்படும். மதிப்பு உயரும். மனைவி பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு கூடும். பூமியால் லாபம் உண்டு. குடும்பத்தில் குழப்பம் நீங்கும். சுபச்செலவு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. உதவிகள் கிட்டும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வசதிகள் பெருகும். புதுமுயற்சிகள் பலன் அளிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். சொத்துக்கள் சேரும். உத்யோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். கவனமுடன் செயல்பட வேண்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,7,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y




**கும்பம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். யோகமான காலம். எதிர்பார்ப்பினால் பலன் உண்டாகும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். தாய்வழி உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். இடமாற்றம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. வெற்றி சீக்கிரம் கிட்டும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை அமையும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். பூமியால் லாபம் அடைவீர்கள். புதிய பொருள் சேரும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பாராட்டுக்கள் கிடைக்கும். மற்றவர் தொல்லைக் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். கலைத்தொழிலில் திருப்பம் தரும். சமூக சேவை செய்ய முன் வருவீர்கள். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள். முகப்பொலிவு உண்டாகும். உணவு பிரியம் அதிகரிக்கும். வாய்ச்சொல் பலன் உண்டு. தொழில் வளம் கூடும். காதலில் புரிந்துணர்வு இருக்கும். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 8,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,R




**மீனம்:** காரியத்தில் வெற்றி காணும் வாரம். ஆதாயம் பெருகும். நிர்வாகத் திறமை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் திறமை பளிச்சிடும். நினைத்தக் காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கலை ஆர்வம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். வீண் செலவு அதிகமாகும். தடைகள் விலகும். தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும். பொன், பொருள் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிதான காரியம் நடைபெறும். குடும்ப மகிழ்ச்சி இருமடங்காகும். சகோதரியால் லாபம் உண்டு. ஒப்பற்ற பலன் சேர்க்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். குடும்ப சச்சரவு ஏற்படும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,6,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

**"The best time to buy real estate was yesterday. The next best time is today."**




## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

# NESAN
## Subramaniam

CALL US

**416-908-5656**



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · FIRST NATIONAL FINANCIAL LP · TD Canada Trust · Manulife · NATIONAL BANK · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**










26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்








உதயம் 1512 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 28, 2025


## சரவணா பவன் சைவ உணவகத்தின் மிசிசாகா நகரின் திருத்தியமைக்கப்பெற்ற கிளையின் திறப்பு விழா





கனடாவில் நான்கு கிளைகளைக் கொண்டு சிறப்பாக இயங்கிவரும் தமிழ்நாட்டை தலைமையாகக் கொண்ட “சரவணா பவன்“ சைவ உணவகத்தின் மிசிசாகா கிளையானது அண்மையில் திருத்தியமைக்கப்பெறுவதற்காக இரண்டு மாதங்கள் மூடப்பட்டு வேலைகள் நடைபெற்றன.

மிக அழகியதாக உள்ளேயும் வெளியேயும் திருத்தப்பெற்றுள்ள இந்தக் கிளையின் திறப்பு விழா 26--03-2025 புதன்கிழமை அன்று மதியம் நடைபெற்றது.

வர்த்தகப் பிரமுகர் கணேசன் சுகுமார் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கிவரும் கனடாவின் நான்கு கிளைகளில் மேற்படி மிசிகாசா நகரத்தில் 4559 **Hurontario St Mississauga Market Place, Mississauga, Ontario L4Z 3L9** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கிளையின் மீள் திறப்பு விழாவில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் அழைக்கப்பெற்றிருந்தனர்.

## கனடா "யாழ் – கந்தர்மடம் மக்கள் ஒன்றியம்" தனது வெற்றிகரமான 30 வது ஆண்டு நிறைவை கடந்த 22ம திகதி ஸ்காபுறோவில் கொண்டாடியது





கடந்த 30 ஆண்டுகளாக கனடாவின் ரொறன்ரோ மாநகரில் இயங்கிவரும் “யாழ்-கந்தர்மடம் மக்கள் ஒன்றியம்“ தனது வெற்றிகரமான 30 வது ஆண்டு நிறைவை 22-03-2025 அன்று ஸ்காபுறோவில் கொண்டாடியது.

மேற்படி ஒன்றியத்தின் இயக்குனர் சபை மற்றும் பொதுச் சபையின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்து மேற்கொண்ட ஏற்பாடுகளால் அன்றைய விழா சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி ஒன்றியத்தின் கடந்த கால இயக்குனர் சபைகளில் பணியாற்றிய பல அன்பர்கள் தொடர்ச்சியாக ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து வருகின்றார்கள்.

மேற்படி ஆண்டு விழாவில் கந்தர்மடத்தையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரமன்றி இயக்குனர் சபை உறுப்பினர்களின் நண்பர்கள் மற்றும் வர்த்தகப்பிரமுகர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## பிரித்தானியாவின் 2024 தேர்தலுக்கு முன்பு நான்கு இலங்கை நபர்கள் மீதான பயண தடை சார்ந்து பிரதமர் அளித்த வாக்குறுதி நிஜமாகியது

### பிரித்தானிய தமிழர் பேரவை வரவேற்கிறது




இலங்கை உள்நாட்டுப் போரின் போது நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள் உட்பட கடுமையான மனித உரி-மை மீறல்களுக்குப் பொறுப்பான நான்கு நபர்கள் மீது சொத்து முடக்கம் மற்றும் பயண தடைகளை விதித்ததற்காக பிரித்தானிய தமிழர் பேரவை (**BTF**), பிரித்தானிய அரசாங்கத்தை வரவேற்று பாராட்டுகின்றது.

உலகளாவிய மனித உரிமைகள் தடை விதிமுறை-களின் கீழ் மாக்னிட்ஸ்கி பாணி-யிலான (**Magnitsky style**) தடையை அமல்படுத்தவும், (1)இலங்கை ஆயுதப் படைகளின் முன்னாள் தளபதி சவேந்திர சில்வா, (2)முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட, (3) இலங்கை முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் (4) துணை இராணுவக் குழுவின் முன்னாள் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் என்கிற கருணா அம்மான் (கருணா குழு) ஆகியோருக்கு எதிராகப் பயணத் தடை மற்றும் சொத்துக்களை முடக்குவதற்காக எடுக்கப்பட்ட இங்கிலாந்து அரசாங்கத்தின் முடிவினைப் பாராட்டுகிறோம். (தொடர்ச்சி 16ம் பக்கம்)

## கனடாவின் பாராளுமன்றத்திற்கான தேர்தலில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் சார்பில் Markham - Stouffville வேட்பாளர் நிரான் ஜெயநேசன்

எதிர்வரும் ஏப்ரல் 28ம் திகதி நடைபெறவுள்ள கனடாவின் மத்திய பாராளுமன்றத்திற்கான தேர்தலில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் சார்பில் **Markham - Stouffville** தொகுதியில் நிற்கும் நிரான் ஜெயநேசன் அவர்கள் தமிழ் மக்களின் ஆதரவையும் ஏனைய பல்லின சமூகங்களின் ஆதரவை எதிர்பார்த்து அதைப் பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.










கடந்த 23-03-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அவரது தேர்தல் பிரச்சார அலுவலகத்தின் திறப்பு விழா 5964 **Main Street, Stouffville** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பல்லின மக்கள் கலந்துகொண்டு தங்கள் ஆதரவை உறுதி செய்தனர். கனடா உதயன் பிரதம ஆசிரியரும் அங்கு அழைக்கப்பெற்றிருந்தார்.